# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI


குரல் 05 அதிர்வு 49 ஜுலை 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162






| Month | Final Cut Off date | Estimated Arrival Date |
|---|---|---|
| July | 2021-07-03 | 2021-08-10 |
| July | 2021-07-10 | 2021-08-17 |
| July | 2021-07-17 | 2021-08-24 |
| July | 2021-07-24 | 2021-08-31 |
| July | 2021-07-31 | 2021-09-07 |
| August | 2021-08-07 | 2021-09-14 |
| August | 2021-08-14 | 2021-09-21 |
| August | 2021-08-21 | 2021-09-28 |
| August | 2021-08-28 | 2021-10-05 |










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் 'டன்டிநொங்' இல் புதியதோர் சேவை

BOC லංකා බැංකුව இலங்கை வங்கி
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank
UNION BANK ඔබේ දියුණුවේ බැංකුව
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA
Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

# தடுப்பூசியில் தடுமாறும் ஆஸ்திரேலிய அரசு

உலக நாடுகள் அனைத்தும், கொரோனா அலையால் தட்டுத்தடுமாறி - விழிபிதுங்கி ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்ற நிலையில் உள்ளன. எத்திசையிலிருந்து வைரஸ் பாயும் என்பதை அறிய முடியாது, நாடுகள் எல்லைகளை மூடியுள்ளன. பல நாடுகளில் இன்னும் பொது முடக்கம் அமுலில் உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீள 'தடுப்பூசியே' இறுதி அஸ்திரமாக கருதப்படுகின்றது. எனவே, தடுப்பூசி தயாரிக்கும் நாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதிசெய்ய நாடுகள் அணிவகுத்து நின்றன. முன்கூட்டியே பதிவுகளை செய்தன. அவ்வாறு முன்பதிவு செய்த நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று.

ஆனாலும் ஆஸ்திரேலியாவில் தற்போது 40 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு அதிகபட்ச சாதனை என்பது, தடுப்பூசி போடுவதற்கான முன்பதிவைச் செய்வது தான். அப்படியே தட்டுத்தடுமாறி முன்பதிவுகளை மேற்கொண்டாலும் தடுப்பூசிக்காக ஒரு மாதம் முதல் ஒன்றரை மாதங்கள் வரை காத்திருக்க வேண்டிய தேவையுள்ளது. வயதின் அடிப்படையில் அடிக்கடி மாற்றம் செய்யப்படும் ஊசித்திட்டத்தில் பைசரா, ஆஸ்ட்ராசெனிகாவா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

ஆஸ்திரேலிய அளவில், முதல் தடுப்பூசி செலுத்த ஆரம்பித்து, கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு, வெறும் 9 சதவீதம் மக்களுக்கே இரண்டு தடுப்பூசிகளும் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளன என தரவுகள் கூறுகின்றன. வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், முழுமையாக இரண்டு தடுப்பூசிகளையும் போட்டிருப்பவர்களின் எண்ணிக்கைப் பட்டியலின் பாதாளத்தில், ஆஸ்திரேலியா இருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல், தடுப்பூசியை அறிமுகப்படுத்திய மூன்றே மாதங்களில், இலக்குகளையும், திட்டங்களையும் ஆஸ்திரேலிய காமன்வெல்த் அரசாங்கம் பலமுறை மாற்றி அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுக்கு பிறகு, மிகக் கடினமான சூழலில், விக்டோரியாவில் தொடங்கி பல மாநிலங்கள் கோவிட்19 பாதிப்புகளால் முழுமுடக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. இத்தகைய இக்கட்டான சூழலில் சிக்கித் தவிக்கும் மக்கள், கூடிய விரைவில் தடுப்பூசி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால், தடுப்பூசிகள் திட்டமிடல் மற்றும் பங்களிப்பு சார்ந்த மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான பதற்ற நிலை, மக்களிடையே பலத்த மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

அரசாங்கத்தின் இலக்கு என்பது, எதிர்வரும் அக்டோபர் 2021-க்குள் 20 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவது என்பதாகும். ஆனால், ஆஸ்ட்ராசெனிக்கா மருந்திற்கு எதிராக பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ ஆலோசனையின் படி, 50 வயதிற்குட்பட்டவர்களுக்கு வழங்கப்படுவதற்கான அனைத்து இலக்குகளும் கைவிடப்பட்டன.

இந்நிலையில் அதிக தடுப்பூசிகளைச் செலுத்தியதில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும், பிரேசில் மூன்றாவது இடத்திலும் உள்ளன. மிகவும் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகள் தடுப்பூசி கிடைக்காமல் போராடும் பொழுது, பணக்கார நாடுகள் தடுப்பூசிகளைப் பெருமளவில் கொள்முதல் செய்து பதுக்கியிருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

கோவிட் தடுப்பூசிகளை செலுத்த ஐந்து தனி ஒப்பந்தங்களை, ஆஸ்திரேலிய அரசாங்கம் சர்வதேச அளவில் ஏற்படுத்தியிருந்தது. இதில் பைசர் மற்றும் ஆஸ்ட்ராசெனிக்கா மருந்துகள் தற்காலிகமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலிய சனத்தொகையின் 4 மடங்கு அதிகமான மக்களுக்கு தடுப்பூசி போடும் அளவிற்கு தங்களது ஒப்பந்தங்கள் மூலம் ஏற்பாடு செய்திருந்தது அரசு.

வானளாவிய திட்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், கடந்த சில மாதங்களில் தடுப்பூசி செலுத்துவது சார்ந்த எந்த ஒரு இலக்கையும் அரசாங்கம் அடைய முடியவில்லை என்பதே இன்றைய நிலை. இந்த வேகத்தில் பயணித்தால், ஆஸ்திரேலியாவில் உள்ள 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாக இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தும் 40 மில்லியன் இலக்கை 2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தான் எட்ட முடியும்.

இந்நிலையில், தடுப்பூசி பற்றிய அறிவிப்புகள் மட்டும் நாளுக்கு நாள் புதியவையாக வந்துகொண்டிருக்கின்றன.


"16 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு, அஸ்ட்ராசெனிக்காவைவிட பைசர் தடுப்பூசியே பாதுகாப்பானது என ATAGI என்ற அமைப்பு பரிந்துரைத்துள்ளது. அதே நேரத்தில், கோவிட் பாதிப்பை ஒப்பிடுகையில், 60 வயதிற்குட்பட்டவர்கள் அஸ்ட்ராசெனிக்கா மருந்தை, பைசர் கிடைக்காத பட்சத்தில் செலுத்தலாம் எனவும் கூறியுள்ளது. மேலும், அது பற்றிய நன்மைகள் மற்றும் அபாயங்கள் புரிந்து கொள்ளுதல் அவசியம் எனவும் வலியுறுத்தி உள்ளது அந்த அமைப்பு.

இத்தகைய, ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் நிறைந்த தகவல்களை வைத்துக் கொண்டு, தாம் எந்த தடுப்பூசி எடுத்துக் கொள்வது என்ற குழம்பிய நிலையிலேயே மக்கள் உள்ளனர்.

கோவிட் என்ற பெருந்தொற்றிலிருந்த மீள்வதெனில் தடுப்பூசியே ஒரேவழி.




கடந்த ஆண்டுக்கு பிறகு, மிகக் கடினமான சூழலில், விக்டோரியாவில் தொடங்கி பல மாநிலங்கள் கோவிட்19 பாதிப்புகளால் முழுமுடக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. இத்தகைய இக்கட்டான சூழலில் சிக்கித் தவிக்கும் மக்கள், கூடிய விரைவில் தடுப்பூசி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால், தடுப்பூசிகள் திட்டமிடல் மற்றும் பங்களிப்பு சார்ந்த மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான பதற்ற நிலை, மக்களிடையே பலத்த மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza Shopping Centre, 49-55 McCrae Street, Dandenong VIC 3175

# ஆஸ்திரேலியாவில் உறுப்பு சிதைப்பா?





பிறந்தவுடனேயே பெண்ணுறுப்பை சிதைக்கும் இஸ்லாம் மதச்சடங்குக்கு ஆஸ்திரேலியாவில் இடமில்லை. அது தடை செய்யப்பட்ட ஒரு சடங்காகவே இருக்கின்றது.எனவே, அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தை மீறியவர்களாகவும்,சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாகவுமே கருதப்படுவார்கள்.

நிலைமை இவ்வாறிருக்கையில் பிறந்து சில நாட்களேயான பெண் குழந்தையின் பிறப்புறுப்பை சிதைக்க முற்பட்ட சம்பவமொன்று அரங்கேறியுள்ளது. இதனுடன் தொடர்புபட்ட இரு பெண்கள் கைது செய்யப்பட்டு பேர்த் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இச்சம்பவம் மீண்டும் பேசுபொருளாக மாறியுள்ளது. அதாவது ஆஸ்திரேலியாவில் தடைசெய்யப்பட்ட இந்த நடைமுறை இன்னமும் தொடர்கின்றதா என்ற வினா மக்கள் மத்தியில் மேலோங்கியது.

பெண்ணொருவர் மிகவும் சூட்சுமமான முறையில் வைத்தியரொருவரை நாடி, குழந்தையின் பிறப்புறுப்பை சிதைப்பதற்கு உதவுமாறு கோரிய நிலையில், உஷாரடைந்த குறித்த வைத்தியர் அது தொடர்பில் பொலிஸாருக்கு இரகசியமாக தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து விரைந்துவந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட பெண்ணையும், ஒத்தாசைக்கு வந்த பெண்ணையும் கைது செய்தனர். அது தொடர்பான செய்திகளும் பட்டிதொட்டியெங்கும் பரவின. இதன்பின்னரே இது தொடர்பான கருத்தாடலும் உருவானது.

இது கலாச்சாரம் சார்ந்த விடயமென கைதான பெண்கள் வாதிட்டு, தமது தரப்பு நியாயத்தை முன்வைத்தாலும், ஆஸ்திரேலியாவைப் பொறுத்தமட்டில் இது தண்டனைக்குரிய குற்றமாகும் என பொலிஸார் சுட்டிக்காட்டி அதற்கான காரணங்களையும் பட்டியலிட்டனர். இறுதியில் இரு பெண்களும் தாம் இழைந்தது குற்றம்தான் என்பதை ஏற்கும்நிலை ஏற்பட்டது.

### கத்னா என்றால் என்ன?

கத்னா (விருத்த சேதனம்) எனப்படுவது பொதுவாக ஆண்குறியின் முன் தோலை நீக்கும் சமய சடங்கு அல்லது அறுவை சிகிச்சையாகும். கூர்மையான கத்தி, பெரும்பாலும் சமய மற்றும் கலாச்சார ரீதியிலும், சில இடங்களில் சுகாதார நோக்கிலும் இவை செய்யப்படுகின்றன. ஆபிரிக்க பழங்குடிகளிடம்தான் முதன் முதலில் விருத்த சேதனம் செய்யும் முறை நடைமுறைக்கு இருந்து வந்தது. எகிப்தில் காணப்படும் பழங்கால குகை ஓவியங்களில் இருந்து இதனை அறியலாம். இதன் பின் ஆபிரகாமிய மதங்களான யூதம் மற்றும் இசுலாம் ஆகியவற்றில் சடங்குகளாக இவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

இஸ்லாமிய மதத்தில் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. எந்தவொரு வயதிலும் விருத்த சேதனம் செய்ய முடியும். இருப்பினும் குழந்தை விருத்தசேதனம் செய்வது மக்களிடையே பொதுவாக உள்ளது.

பெண்களுக்கான கத்னா ( பெண்ணுறுப்பில் கிளிட்டோரியஸ் எனப்படும் பகுதியை வெட்டி எடுக்கும் பழக்கம் ) பற்றி நேரடியான தரவகள் ஏதுமில்லை என இசுலாமிய அறிஞர்கள் கூறினாலும், இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் மக்களுக்கிடையே குறிப்பாக ஆபிரிக்க இன மக்களிடையே மாற்றுக்கருத்துக்கள் இருக்கிறது.

பெண்களுக்கான கத்னா மத அடிப்படையிலான சடங்குகள் தான் என்று கூறி வருகிறார்கள் . பெண்கள் கத்னா செய்து வருவதற்கு சில ஆதாரங்களையும் மத்தின் அடிப்படையில் தருகிறார்கள்.

இது மதம் சார்ந்த நம்பிக்கையாக இருக்கின்றது. ஆனாலும் அந்த நம்பிக்கைக்கு செயல் வடிவம் கொடுப்பதென்பது ஆஸ்திரேலியாவில் குற்றச்செயலாகவும், சிறுவர் துஷ்பிரயோகமாகவுமே பார்க்கப்படுகின்றது. மருத்துவ நோக்கங்களுக்காக அன்றி, பிறப்புறுப்பை அல்லது அதன் ஒரு பகுதியைஅகற்றமுற்படுவதுதண்டனைக்குரிய குற்றமாகும்.

எனினும், இந்த நடைமுறையை - சட்டத்தைமீறி பெண் குழந்தைகளின் உறுப்பை சிதைக்கும் செயற்பாடுகள் தொடரவே செய்கின்றன. அண்மைக் கால தரவுகளை எடுத்துக்கொண்டால் பெண்ணுறுப்பு சிதைக்கப்பட்ட 53 ஆயிரம் பேர் ஆஸ்திரேலியாவில் வாழ்கின்றனர் எனவும், இது அந்நாட்டிலுள்ள பெண்கள் சனத்தொகையில் இது 0.4 வீதமாகும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல அறிவிக்கப்படாத பலசம்பவங்களும்இடம்பெற்றுள்ளதால் பெண்ணுறுப்பு சிதைக்கப்பட்ட சுமார் 2 லட்சம்பேர்வரை ஆஸ்திரேலியாவில் இருக்கக்கூடும் என்றே சில அமைப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன. இது உண்மைதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஆஸ்திரேலியாவில் நாளாந்தம் 11 பெண்கள் இந்த ஆபத்தை எதிர்கொள்கின்றனர் என பெண் செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பெண்கு ழந்தைகளின் உறுப்பு சிதைப்பு சம்பந்தமாக 2017 இல் ஆஸ்திரேலியாவின் குழந்தை நல மருத்துவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் 62 வீதமானவர்கள் இந்த நடைமுறை தொடர்வதாகவே கருத்து வெளியிட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவில் சட்டரீதியாக இதற்கு கதவடைப்பு என்பதால் பிற நாடுகளுக்கு சென்றுகூட கத்னா சடங்கு நடத்தப்படும் நிலையும் தொடரவே செய்கின்றது.

ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் வெள்ளையினத்தவர்கள் அல்லாத சமூகத்தில் உள்ள குழந்தைகளே இந்தச் சடங்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இது வெள்ளையர்களுக்கு பெருமளவு பாதிப்பில்லை என்பதால் பன்நாட்டு ஊடகங்களில் உறுப்பு சிதைப்பு தொடர்பில் போதிய தகவல்கள், விழிப்புணர்வு திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஆஸ்திரேலியாவிலும் இந்நிலைமையை காணமுடிகின்றது.

"எமது சமூகத்தில் உள்ளவர்கள் உறுப்பு சிதைப்பு மேற்கொண்டபோது அது தொடர்பில் எவரும் கேள்வி எழுப்பவில்லை. தடுத்து நிறுத்தவும் இல்லை. கர்ப்பம் தரிக்கும்வேளையில் தான் இதனை உணரமுடிகின்றது. " - என பெண்கள் சிலர் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, பெண் பிறப்புறுப்பு சிதைக்கப்படும் விவகாரத்துக்கு தீர்வைக் காண்பதற்கும், இது தொடர்பில் மாணவர்களுக்கு கல்வி அறிவை புகட்டுவதற்கும் அவுஸ்திரேலிய தயங்குகின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வகுப்பறைகளுக்குள் இது குறித்த விவாதங்களை கொண்டுவருவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கான சிறந்த ஆரம்பமாக அமையும் என்பதே சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆர்வம் இருந்தாலும் சிலர் முன்வருவதில்லை. இது கலாச்சாரம் சார்ந்த விடயமென்பதால் இலகுவில் இனவெறியர் முத்திரை குத்தப்படலாம், உணர்வுகள் தூண்டப்பட்டு பழிவாங்கல்கள் இடம்பெறலாம் என்ற அச்சமே அதற்கு காரணம்.

தற்போதைய சூழ்நிலையில் உலகளவில் கொரோனா வைரஸ் குறித்து மாத்திரமேகூடுதல்கவனம்செலுத்தப்படுகின்றது. ஏனைய ஆபத்தான நோய்கள் குறித்து முழுமையாக கவனம் செலுத்தப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் ஆஸ்திரேலியாவிலும் , உலக நாடுகளிலும் பெண் பிறப்புறுப்பு சிதைக்கப்படுவதால் பெண்களின் உடல் நலத்திற்கு ஆபத்து அதிகம் என தன்னார்வ அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

சடங்கு, சம்பிரதாயமெல்லாம் மக்களை வாழவைப்பதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் சிறந்த கருவிகளாக இருக்கவேண்டும். சிலவேளை அவை மனித குலத்துக்கு அச்சுறுத்தல், ஆபத்தெனில் அவற்றை துடைத்தெறிவதே சிறந்தது. மாறாக கலாச்சாரம், பாரம்பரியம் என தக்கவைத்துக்கொண்டால் ஆபத்து மனிதகுலத்துக்குதான் என்பதையும் கவனத்தில் கொள்வோம்.

# Sai Shree Foods

Pty. Ltd.

**AUSTRALIA - CANADA - INDIA**

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# கோட்டாவின் ‘விடுதலை’ நாடகம்!

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்” கதையை கேள்விபட்டிருப்போம். எனினும், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச “ஒரே கல்லில் 17 மாங்காய்களை வீழ்த்தி” சாதனைப் படைத்துள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 16 கைதிகளுக்கு பொது மன்னிப்பு என்ற போர்வையில், கொலைக் குற்றவாளியான துமிந்த சில்வாவையும் ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுவித்துள்ளார். இந்த விடயமானது தேசிய ரீதியில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியை அதிகரித்துள்ளது.

வெசாக் பூரணை தினமாக ஜூன் 24ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் உட்பட 94 பேர் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் பெரும்பாலும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், சித்திரவதை மூலம் பலவந்தமாகப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் இவர்கள் பலர் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக ஒருபுறம் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டாலும், மறுபுறத்தில் ”அத்தி பூத்தாற்போல்” நிகழ்ந்த இந்த விடயத்தை வரவேற்க வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ததுடன், சக அரசியல்வாதியைச் சுட்டுப் படுகொலை செய்த குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது அரசியல் நண்பரான துமிந்த சில்வாவுக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுவித்த விடயமானது தென்னிலங்கையிலும் ஜனாதிபதிக்கு எதிரான வலுவான எதிர்ப்பினை பதிவு செய்ய காரணமாக அமைந்துள்ளது எனலாம். நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது அரசியல் நண்பருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பளித்தமையானது இலங்கையின் சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குறியாக்கியுள்ளதாக பலர் விமசர்சனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், பொதுமன்னிப்பளிக்கும் அதிகாரம் தனிப்பட்ட விறுப்பு - வெறுப்புக்களின்பால் பயன்படுத்தப்படுவதாக, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கூறியுள்ளார். இதேவேளை, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவும் இந்த துமிந்த சில்வா விடுதலை விடயத்தை விமர்சித்துள்ளன.

இவ்வாறான ஒரு சூழலில், அனைத்து கைதிகளும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை மீறுவதும், அரசுக்கு சார்பான கைதிகளுக்கு விசேட சலுகைகளை வழங்குவதும் ஏனைய கைதிகளின் அடிப்படை உரிமைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் மீறுவதாக அமையுமென கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

“ஒரு கைதியை விடுவிப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை, ஆனால் ஒரு நபரின் சிவில் அந்தஸ்து, பணபலம், அதிகாரம் அல்லது அரசியல் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் அதை எதிர்க்கிறோம்.” என அந்தக் குழு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கிய விடயத்தை வரவேற்கும் பலரும், துமிந்த சில்வாவிற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை விமர்சித்துள்ளனர். அரசியலமைப்பின் 34ஆவது பிரிவின் கீழ் இலங்கை ஜனாதிபதி மன்னிப்பு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவரான சட்டத்தரணி சேனக பெரேரா குறிப்பிடுகின்றார்.

அரசியல் கைதிகளை (குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள்) விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இன்று நேற்று ஆரம்பமான ஒரு விடயமல்ல, கடந்த பல வருடங்களாக தமிழர் தரப்பால் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் பிரதானமான கோரிக்கைகளில் இதுவும் ஒன்று. எவ்வித காரணமும் இன்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புகைப்படங்களை வைத்திருந்தார், கலந்துரையாடினார், போராட்டம் தொடர்பில் பேசினார் போன்ற “சில்லறைத்தனமான” காரணங்களுக்காகக் கூட பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலர் இதுவரை ஒருமுறையேனும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படாதவர்கள் பலர். குற்றமிழைக்காமல் பல வருடங்களாக சிறையில் வாடும் இவர்கள் தொடர்பில் அதிகாரத்திற்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் வாயில் வடை சுட்டார்களேத் தவிர குறிப்பிடும் படியாக எதனையும் செய்யவில்லை.

இவ்வாறான சூழலில் தற்போது 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக, அரசாங்கத் தரப்பு தொடர்ச்சியாக தம்பட்டம் அடித்து வருகிறது, எனினும் துமிந்த சில்வா என்ற தனிநபரை விடுதலை செய்வதற்காகவே, குறித்த 16 பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதே தமிழ் தரப்பின் வாதம். குறித்த 16 பேரும் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று தண்டனை வழங்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அனைவருக்கும் அடுத்த வருடம் விடுதலையாவதற்காக காத்திருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமே அறிவித்திருந்தார். இந்நிலையில் இன்னும் ஆறு மாதங்களில் விடுதலையாகவிருந்த கைதிகளை விடுவித்துவிட்டு ஏதோ தமிழ் மக்களுக்கு நீதியை தந்துவிட்டது போல் அரசாங்கம் பெருமிதம் வெளியிடுவதாகவே பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதே தமிழர் தரப்பின் கோரிக்கையாகும். குறிப்பாக இவர்கள் தொடர்பில்சட்ட நடவடிக்கைகளைத்தாண்டி, அரசியல் ரீதியாக தீர்மானம் மேற்கொண்டு என்பதே பல வருடங்களாக முன்வைக்கப்படும் கோரிக்கையாகும். வழக்கு விசாரணைகள் இன்றி பலர் தசாப்தங்களை கடந்து சிறையில் வாடுவதோடு, இன்னும் சிலர் பலவந்தமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் குற்றவாளிகளாக ஆக்கப்பட்டுள்ளதாக அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுக்கும் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் (குற்றவாளிகளாக காணப்பட்டாலும்) நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும் என்பதே தற்போதைய கோரிக்கையாக அமைந்துள்ளது. காரணம் அவர்களில் பலர் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு விதிக்கப்படும் தண்டனை காலத்தைவிட கூடுதலான காலம் சிறையில் காலத்தை கழித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் அல்லது சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப திருத்தியமைத்தல் மற்றும் அரசியல் கைதிகள் விடயத்தை வலியுறுத்தி, அரசாங்கத்தின் அடிவயிற்றிலேயே கைவைத்துள்ள நிலையில், அதனை சமாளிப்பதற்கும் மறுபுறத்தில் கொலைக் குற்றவாளியான துமிந்த சில்வாவின் விடுதலையால் எழும் எதிர்ப்பினை சமாளிப்பதற்கும் என இரண்டு விடயங்களுக்கும் ஒரே தீர்வாக தமிழ் கைதிகள் 16 பேரை விடுவித்து அரசாங்கம் சமாளிக்க முயன்று இன்று தோற்று போயுள்ளது என்பதே யதார்த்தம்.

துமிந்த சில்வாவின் விடுதலையை தென்னிலங்கையும் பெரிதாக வரவேற்காத நிலையில், அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சி உள்ளிட்ட தென்னிலங்கையின் தரப்பும், வடக்கின் தமிழ்த் தரப்பும் தமது கடுமையான விமர்சனத்தை பதிவு செய்துள்ளனர். துமிந்த சில்வாவை விடுதலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்ற அரசியல் கைதிகள் “பகடை”யாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தமிழ் அரசியல் தலைமைகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும், நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், இதுத் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அசியல் ரீதியில் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும், மாறாக மற்றுமொரு மரண தண்டனை கைதியை விடுதலை செய்வதற்கான, பகடைக் காயாக இவர்கள் பயன்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# இயற்கை அழிப்புக் குற்றங்கள் இனி இனப் படுகொலைக்கு நிகராகும்!

● பாரிஸிலிருந்து குமாரதாஸன்

வெப்பம் தாங்காமல் கனடாவில் ஒரு கிராமமே எரிந்து பொசுங்கியது. பிரிட்டிஷ் கொலம்பியாவை ஒரே நாளில் பல்லாயிரக் கணக்கான மின்னல்கள் தாக்கின. பருவநிலை மாற்றங்கள் திடீர் திடீரென நடத்துகின்ற இத்தகைய அதிரடித் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்பது யார்?

சுற்றுச் சூழல் நிபுணர்களோ இவை எதிர்பாராத நிகழ்வுகள் அல்ல. இனி நாளாந்தம் எதிர்பார்க்க வேண்டிய சம்பவங்கள் என்று கூறிப் பெரும் குண்டைத் தூக்கிப் போடுகின்றனர்.

சூழல் கட்டமைப்பை வலு ஈஸியாகச்சிதைத்துவிட்டு தானுண்டு தன்பாடுண்டுஎன்று மனிதன் இனியும் வாழ்ந்திட முடியுமா? பட்டி தொட்டி எங்கும் இந்தக் கேள்வி எழுகின்ற அளவுக்கு அழிவுகள்நம்மை நெருங்கி வருகின்றன.

அண்மையில் இலங்கைக் கடலில் கப்பல் ஒன்று தொன் கணக்கில் பிளாஸ்ரிக்கைகொட்டிவிட்டு மூழ்கிப்போனது. வேறு ஆபத்தான நச்சுப் பொருள்களும் கடலில்கலந்தன. அடுத்த சில நாட்களில் அரிய கடல் உயிரினங்கள் - ஆமைகள், டொல்பின்கள் - டசின் கணக்கில் இறந்து அழுகிய நிலையில் கரையொதுங்கின.

உள்ளூரில் ஆமை பிடித்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். தடுப்பதற்குபல சட்டங்கள் உண்டு. ஆனால் கடலில் கப்பல் ஒன்று ஏற்படுத்திய பேரழிவினால் அழிந்த சுமார் இருநூறு ஆமைகளது மரணத்துக்குப் பொறுப்புக் கூற சட்டத்தில் எந்த சரத்துகளும் இல்லை.

தீப்பற்றிய கப்பலில் இருந்து அதன்இலங்கை முகவருக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்ற ஈமெயில் செய்திகள் ரகசியமாக அழிக்கப்பட்டுள்ளதை உள்ளூர் நீதிமன்றம் ஒன்று கண்டறிந்தது. அதன் பின்னால் உள்ள சக்திகள், சதிகள் அம்பலமாக் கப்படாமலேயேவிவகாரம் அமுக்கப்பட்டு விட்டது.

**உள்ளூரில் ஆமை பிடித்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். தடுப்பதற்கு பல சட்டங்கள் உண்டு. ஆனால் கடலில் கப்பல் ஒன்று ஏற்படுத்திய பேரழிவினால் அழிந்த சுமார் இருநூறு ஆமைகளது மரணத்துக்குப் பொறுப்புக் கூற சட்டத்தில் எந்த சரத்துகளும் இல்லை.**





காப்புறுதி நஷ்டஈடுகள் பெறுகின்ற லாப நோக்கத்தில் பாவனைக் காலம் முடியும் தறுவாயில் உள்ள பழைய கப்பல்களைப் பயண வழிகளில் வேண்டும் என்றே மூழ்கடிக்கின்ற உத்தி உலகெங்கும் பின்பற்றப்படுகின்ற ஒரு மோசடியாகத் தொடர்ந்து கொண்டே உள்ளது. இத்தகைய திட்டமிட்ட கப்பல் அனர்த்தங்களால் பேரழிவை எதிர்கொள்வது கடலும் கடல் சார்ந்த இயற்கையும் உயிரினங்களும் தான் என்பதால் நாடுகளோ அரசுகளோ அதனைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. கப்பல்களை மீட்டுப் பாதுகாக்கும் வலிமை குறைந்த சிறிய நாடுகளினது எல்லைகளுக்கு அண்மை யிலேயே இவ்வாறான கப்பல் விபத்து கள் நடப்பதும் அவதானித்தால் புரியும்.

கடலின் இயற்கையைக் கறுவறுத்தகப்பல் அனர்த்தத்துக்கு வழங்கப்படக் கூடிய நஷ்டத் தொகைகள் பலரது கைகளுக்குப் போய்ச் சேரலாம். அதனால் இயற்கைக்கு நிவாரணம் கிடைத்து விடமுடியாது. கப்பலின் நிறுவனம், மாலுமி, அது பயணித்த நாட்டின் அதிகாரிகள், அந்த நாடு என்று பலரது கூட்டுப் பொறுப்பில் நிகழ்ந்த ஒரு குற்றம் இது. பொறுப்புக் கூறலுக்குள் சிக்காமல் - பெயர் குறிப்பிட்டுக் குற்றம் சுமத்த முடி யாத வாய்ப்புக்களைப் பயன்படுத்தி- மனிதன் இயற்கை மீது புரிகின்ற இவ்வாறான குற்றங்களை (A Crime With No Name) தடுப்பது எப்படி?

மனிதனைப் பாதுகாப்பதற்கு சர்வதேச சட்டங்கள் பல உள்ளன. ஆனால் கப்பலைமூழ்கடித்து கடல் உயிரினங்களை அழிப்பது போன்ற இயற்கை மீதான குற்றங்களுக்குத் தீர்ப்புச் சொல்ல நாடுகள் மட்டத்திலோ அனைத்துலக ரீதியிலோ பொதுவான சட்டங்கள் கிடையாது.

அமேசன் காடழிப்பு, ஆஸ்திரேலியக் காட்டுத் தீ அனர்த்தம் போன்ற இயற்கைப் பேரழிவுகளுக்குப் பின்னால் இருக்கின்ற மனித கரங்கள் தண்டிக்கப் படுவதற்கு வாய்ப்பில்லாமற்போனதை அண்மைய உலக வரலாறு நிரூபித்தது. ஆயினும் இயற்கை மீதான இவைபோன்ற படுகொலைகள் (Ecocide) தொடர்ந்து நடந்து கொண்டே உள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவை ஒருநாட்டின் எல்லைக்குள் நிகழ்ந்தாலும் பாதிப்புகள் உலகம் முழுவதுக்கும் பொதுவானவையாகவே மாறுகின்றன. ஏனெனில் இயற்கைச் சூழல் கட்டமைப்புக்குத் தனித்தனியே எல்லைக் கோட்டு வரையறைகள் கிடையாது.

இயற்கைச் சூழல் மீது புரியப்படும் பேரழிவுகளை (Mass environmental destruction) சர்வதேச குற்றங்களாகக் கருதி சட்டங்கள் மூலம் தண்டிக்க வேண்டும் என்ற குரல்கள் வியட்நாம் யுத்த காலத்தில் இருந்தே எழுப்பப் பட்டுவந்தாலும் அதற்கு ஆதரவான சர்வதேச இணக்கப்பாடு இன்னமும் எட்டப்பட முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.ஆயினும் பிரான்ஸ் போன்ற ஒருசில நாடுகளில் சூழல் அழிப்புக் குற்றங்களைத் தடுப்பதற்கு நாட்டின் அரசமைப்பையே மாற்றி எழுத வேண்டும் என்று கோரும் அளவுக்கு மக்கள் இயற்கை மீது கரிசனை கொள்ளத்தொடங்கி விட்டனர்.

சூழல் ஆர்வலர்களும் அமைப்புகளும் இடைவிடாமல் நடத்திவரும் நீண்டகாலமுயற்சிகள்




# இயற்கை அழிப்புக் குற்றங்கள் இனி இனப் படுகொலைக்கு நிகராகலாம்!

அவ்வாறு இயற்கையைப்பாதுகாக்கின்ற சர்வதேச சட்டங்கள்உருவாக்கப்படுவதற்கான பாதையில்ஒரு முக்கிய திருப்பத்தை எட்டி உள்ளன.

உலகில் தற்சமயம் நான்கு வகையான குற்றங்களே சர்வதேச குற்றங்கள் என்றவகையறைக்குள் எழுதப்பட்டுள்ளன. மனித இன அழிப்பு (Genocide), யுத்தக் குற்றங்கள் (war crimes), மனிதத் தன்மைக்கு எதிரான குற்றங்கள் (crimes against humanity), ஆக்கிரமிப்புக் குற்றங்கள் (crime of aggression) ஆகிய நான்குமே சர்வதேச குற்றங்களாகக் (Iinternational crimes) கருதப்படுகின்றன.

ரோம் பிரகடனத்தின் கீழ் (Rome Statute) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் (International Criminal Court-ICC) அவை கையாளப்பட்டுவருகின்றன. நெதர்லாந்தின் ஹேக் நகரைத் தளமாகக் கொண்ட சுயாதீன நீதிமன்றமானசர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 1998 இல் நிறுவப்பட அடிப்படையாக அமைந்த ரோம் பிரகடனத்துக்கான வரைவு தயாரான போது அதில் சூழல் அல்லது இயற்கைப் படுகொலையையும் சர்வதேச குற்றமாகச் சேர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அந்த வரைபு போதுமான அளவு தெளிவாகவரையறுக்கப்படவில்லை என்று கூறித்தடுத்துவிட்டன. அதன் பிறகு சூழல் படுகொலைகளை சர்வதேச குற்றங்களில் சேர்ப்பதற்கான பல முயற்சிகள்எடுக்கப்பட்டு வந்த போதிலும் அவைவெற்றியளிக்கவில்லை.

தற்சமயம் குற்றவியல் நீதிமன்றத்தால் கவனிக்கப்பட்டு வருகின்ற நான்கு வகை யான சர்வதேச குற்றங்களுடன் ஐந்தாவதாக இயற்கைச் சூழல் மீதான குற்றங்களையும். (Ecocide) சேர்ப்பதற்கான உலகளாவிய சுற்றுச் சூழல் இயக்கங்களின் போராட்டங்கள் அண்மையில் ஒரு மைல் கல்லைச் சந்தித்துள்ளன.

மிகப் பிரபலமான சர்வதேச சட்டநிபுணர்கள் பன்னிருவர் அடங்கிய சுயாதீன குழு ஒன்று இயற்கைச் சூழல் மீதான குற்றங்களை வரையறை செய்கின்ற சட்டங்களுக்கு அடிப்படையாக அமையக்கூடிய ஒருவரைபைத் தயாரித்துள்ளது.நெதர்லாந் தைத் தளமாகக் கொண்ட "ஸ்ரொப் எக்கோசைட் பவுண்டேஷன்" (Stop Ecocide Foundation என்ற அமைப்பின் உதவியுடன் சுமார் ஆறுமாத கால முயற்சி ஊடாக 165 சொற்களுக்குள் அடங்குகின்ற சர்வ தேச சட்ட வரைபுக்கான அடிப்படையை (draft of the definition) அந்த நிபுணர் குழு வரைந்திருக்கிறது.

சுற்றுச் சூழலுக்குக் கடுமையான - பரவலான- பெரும் பாதிப்புகளைஉடனடியாகவும் நீண்ட காலப் போக்கிலும் ஏற்படுத்தும் என்பதை தெரிந்து கொண்டுமனிதனால் புரியப்படுகின்ற குற்றங்கள் சர்வதேச ரீதியான குற்றங்களாக ஏற்கப்பட்டு அத்தகையோரைத் தண்டிப்பதைஅடிப்படையாகக் கொண்டதே அந்தவரைபு.

1970 களில் தொடக்கப்பட்ட இயற்கைக்கு எதிரான குற்றங்கள் (crime against nature) பற்றிய விவாதங்கள் இன்னமும் கோரிக்கைகள் என்ற வடிவத்துக்கு அப்பால் சட்டரீதியான நடைமுறைகளுக்கு நகரவில்லை. ஆனால் தற்சமயம் உருவாகி இருக்கின்ற இந்த வரைபு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு எழுத்து வடிவமாகக் கருதப்படுகிறது.

இயற்கை மீதான குற்றங்கள் சர்வதேச குற்றங்கள் என்ற அருகதையைப் பெறுவதற்கு நிபுணர்கள் குழுவின் இந்த வரைபு இன்னும் நீண்ட பல படிநிலை களைத் தாண்ட வேண்டி உள்ளது.

நிபுணர்களது வரைபு (Legal Definition of Ecocide) சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் 123 உறுப்பு நாடுகளில் ஒன்றினால் ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அது பின்னர் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வருடாந்த அமர்வில்ஒரு பிரேரணையாக முன்வைக்கப்பட்டு பெரும்பான்மையான உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இயற்கைச் சூழல் மீதான அழிப்புகள் கிறிமினல் குற்றங்கள் என்று குறிப்பிடுகின்ற இறுதிச் சட்ட வரைபு அதன் மீதான வாக்கெடுப்பில் உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கினரது பெரும்பான்மையைப் பெறவேண்டும். வாக்களிப்பில் வெற்றி பெற்று ஒரு வருடம் கழிந்த பிறகே அந்தசட்டங்கள் உறுப்பு நாடுகளில் நடைமுறை படுத்தப்படமுடியும்.

சட்டத்துக்கு ஒப்புதல் அளித்த நாடுகள் உலகில் எங்காவது நிகழ்கின்ற சூழல் அழிப்புக் குற்றங்களில் சம்பந்தப்படுகின்ற தன் நாட்டவர்கள் அல்லாத எவரையும் தனது நாட்டில் கைது செய்ய முடியும். தற்சமயம் போர்க் குற்றவாளி களைக் கைது செய்வது போன்று அந்த நடவடிக்கை அமையும்.

'எக்கோசைட்' (Ecocide) குற்றங்களை சர்வதேச குற்றங்களாக்குவதற்கு ஆதரவான நிலைப்பாட்டை பரிசுத்த பாப்பரசர் கடந்த 2019இல் வெளிப்படையாக வெளியிட்டிருந்தார் . சுற்றுச் சூழல் மீதான குற்றங்களை அவர் "உலக அமைதிக்கு எதிரான ஐந்தாவது வகைக் குற்றம்" என்று அங்கரித்தார். பிரான்ஸின் அதிபர் மக்ரோன் அமேசன் காடுகள் அழிக்கப்படுவதை 'எக்கோசைட்' என்று குறிப்பிட்டு, அத்தகைய குற்றங்களுக்கு எதிரான போரில் பிரான்ஸ் இணைந்து நிற்கும் என்று அறிவித்தார். புவி வெப்பத்தால் கடல்மட்டம் உயர்ந்து நீரில் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள மாலை தீவு போன்ற சிறிய நாடுகளும் 'எக்கோசைட்' குற்றங்களைச் சட்டங்களால்தடுப்பதை ஆதரிக்கின்றன.

ஆனால் ஏற்கனவே போர்க் குற்றச் சாட்டுகளை எதிர்கொள்கின்ற இலங்கை போன்ற சில நாடுகள் "எக்கோசைட்" என்ற வார்த்தைக்கு மிரள்கின்றன. இலங்கையில் போருக்குப் பிந்திய உட்கட்டுமான அபிவிருத்திகள் சுற்றுச்சூழலை மிக மோசமாகச் சிதைத்து வருவதாக அங்கிருந்து குற்றச்சாட்டுகள் கிளம்பத் தொடங்கி உள்ளன அங்கு "எக்கோசைட்" கோஷங்கள் எழுவதைஅந்நாட்டு அரசு ஒடுக்க முற்படுவதாகவும்கண்டனங்கள் உள்ளன.

மிகப்பலமான கார்ப்பரேட் கம்பனிகளைகொண்ட நாடுகளும் "எக்கோசைட்" குற்றங்களுக்குத் துணை போகின்றன. எனவே இயற்கை அழிப்புக் குற்றங்கள் சர்வதேச குற்றங்களாக மாற்றப்படுவதைகார்ப்பரேட் ஜம்பாவான்களும் எதிர்க்கின் றனர்.

இவ்வாறான கள நிலைமைக்கு மத்தியிலும் தங்களது அடிப்படை வரைவு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குச் செல்லும் என்ற நம்பிக்கையை நிபுணர் குழு வெளியிட்டுள்ளது. உலகெங்கும் தொற்று நோயும் இயற்கைச் சீற்றங் களும் பெருகி வருகின்ற சூழ்நிலையில்- உலகின் மைய அரசியல் பேசு பொருளாகப் பருவநிலை மாற்றம் மாறியிருக்கின்ற பின்னணியில்- சூழல் அழிப்புக் குற்றங்கள் சர்வதேச குற்றப்பட்டியலில் சேர்வதற்கான வாய்ப்புகள்பிரகாசமாகவே தெரிகின்றன.

# நேர்கொண்ட பார்வையுடன் வீறுநடை தொடரும்!

ஆஸ்திரேலியாவை நோக்கி தமிழர்களின் புலம்பெயர் படலம் ஆரம்பமான காலந்தொட்டே தமிழ்ப் பத்திரிகைகளும்,சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. எனினும், சவால்களுக்கு முகங்கொடுத்து நெடுநாள் நீடித்து நிலைப்பதென்பது பலப்பரீட்சையே! பெருமெடுப்பில் – பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் பயணத்தை ஆரம்பித்த பத்திரிகைகள்கூட , பாதியிலேயே பயணத்தை முடித்துக்கொண்ட. இதற்கு பொருளாதார நெருக்கடி – தட்டுப்பாடு ஓர் காரணமாக இருந்தாலும், கால ஓட்டத்துக்கேற்ப மாற்றங்களை மேற்கொண்டு புதுமைகளுக்கு வழிவிட்டு பயணிக்காமையே பிரதான காரணம் எனலாம்.

தற்போதைய நவீன யுகத்தில் இணைய மற்றும் இலத்திரனியல் ஊடகங்களே மக்கள் மத்தியில் கோலோச்சியுள்ளன, அச்சு ஊடகங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன என்றே 'ஊடகங்களின் போக்கு' பற்றி கதைக்கையில் பலரும் பட்டியலிடுகின்றனர். ஆனால் இன்றளவிலும் அதிகாரப்பூர்வ – வரலாற்று ஆவணமாக பத்திரிகைகளே கருதப்படுகின்றன. எனவே, வாசகர்களின் தேடல் பசிக்கான தீணியை உரிய வகையில் பத்திரிகை ஊடாக வழங்கினால் நீடித்து நிலைத்து – வெற்றி நடைபோடலாம் என்பதே நிதர்சனம். இவ்வழியிலேயே எதிரொலி தனது பயணத்தை ஆரம்பித்து, நான்காண்டுகள் கடந்து ஐந்தாவது ஆண்டில் காலடி வைக்கின்றது.




ஆஸ்திரேலியாவில் எந்த பகுதியில் எந்த சம்பவம் இடம்பெற்றாலும் அது தொடர்பான தகவல்கள் மறுநொடியே சமூகவலைத் தளங்களிலும், இணைய ஊடகங்களிலும் வெளிவந்துவிடுகின்றன. இன்றைய நவீன ஊடகங்கள், அச்சு ஊடகங்களின் இருப்புக்கு ஏதோவொரு விதத்தில் அச்சுறுத்தல் என்பதால் பல பக்கங்களுடன் வெளிவந்த நாளிதல்கள்கூட பக்கங்களை குறைத்துள்ளன. நாளிதல்களே இவ்வாறு திண்டாடும்போது மாத இதல்களின் கதியை நினைத்து பாருங்கள் என பாடமெடுப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலேயே தடையின்றி எதிரொலி மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. நாம் பயணிக்கும் பாதை மலர் தூவப்பட்ட பட்டுப்பாதை அல்ல, முற்பாதையில் பயணிப்பதை போலவே வலிகளை சுமக்கின்றோம். எனினும், வாசகர்கள் உச்ச பயனை, திருப்தியை அடையவேண்டும் என்பதற்காக வலியைக்கூட பொறுப்பாகவே கருதி, நேர்கொண்ட பார்வையுடன் வீறுநடை போடுகின்றோம்.

இற்றைக்கு நான்காண்டுகளுக்கு முன்னரே நீதியின் ஒளியாகவும், தமிழ்பேசும் மக்களின் குரலாவது உதயமானது எதிரொலி. ஆரம்பம் முதல் இன்றுவரை சவால்கள் தொடரவே செய்கின்றன. எமது பயணத்தை ஒடுக்குவதற்கு சிலர் சக்கரவியூகம்கூட வகுத்து செயற்பட்டனர். 'எதிரொலி'யின் முன்னணி, பின்னணி என பல கோணங்களில் கதைகளை கட்டவிழ்த்துவிட்டனர். ஒரு கட்டத்தில் துரோகி முத்திரைக்கூட குத்தப்பட்டது. ஏன்! இலங்கை அரசின் நிதி உதவி நிறுத்தப்பட்டதும், எதிரொலி மௌனித்துவிடும் என்று ஏளனமாக விமர்சித்தனர். ஆனால் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளுக்கு மத்தியிலும், சவால்களையெல்லாம் சமாளித்து கங்காரு தேசத்திலும் கம்பீரமாக 5ஆவது ஆண்டில் காலடி வைக்கின்றது உங்கள் 'எதிரொலி'.

பத்திரிகையின் பின்புலம் பற்றி கதையளந்தவர்கள், அதில் வெளிவரும் ஆக்கங்களை என்றும் விமர்சிப்பதில்லை என்பதே எமக்கான வெற்றிதான். 'கொப்பி பேஸ்ட்' டை நம்பி பயணிக்கும் ஊடகங்களுக்கு மத்தியில் தனித்துவமான ஆக்கங்களைத் தாங்கி தனிவழியில் பயணிப்பதாலேயே வாசகர்களின் மனங்களில் எதிரொலிக்கு தனியிடம் உள்ளது.




அந்த நம்பிக்கையை தவிடுபொடியாக்காமல், மேலும் சில மாற்றங்களுடன், கொள்கை மாறாது 'எதிரொலி' தொடர்ந்தும் பயணிக்கும் என்ற உறுதிமொழியையும் வழங்குகின்றோம். தனித்துவமான ஆக்கங்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றது 'எதிரொலி' ஆசிரியர்பீடம்.

'கொரோனா' தாண்டவம் எல்லா துறைகளிலும் கைவரிசைக்காட்டியது. பல நாடுகளில் அச்சு ஊடகங்களும் தடைபட்டன. ஆனாலும் எதிரொலியின் பயணம் நிறுத்தப்படவில்லை. இதற்கு எமக்கு பேராதரவு வழங்கிய, வழங்கிவரும் விளம்பரதாரர்களுக்கும் நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம். எதிர்காலத்திலும் அவர்களின் ஆதரவு தொடரும் என திடமாக நம்புகின்றோம். அதேபோல் அச்சு, விநியோகம் உள்ளிட்ட பணிகளை முன்னெடுக்கும் பணியாளர்களுக்கும் நன்றிகள்.

நேர்மையான விமர்சனங்களை எதிரொலி என்றும் மலர்தூவி வரவேற்கும். எனவே, தவறுகள் இருந்தால், மாற்றங்கள் செய்யவேண்டியிருந்தால் உரிமையுடன் சுட்டிக்காட்டுமாறு எமது உயிர்நாடியான வாசகர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் ஆதரவு தொடரும் என்ற நம்பிக்கையில் ஐந்தாவது ஆண்டிலும் கால் பதிப்பதில் எமக்கு பேரானந்தமே!



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



● அ.முத்துக்கிருஷ்ணன்

இந்தியாவை, நாம் 'மத்திய அரசு' என்று சொல்லிச் சொல்லி நமக்கு உள்ள அதிகாரம் அனைத்தையும் அங்கே தாரைவார்த்துக் கொடுத்துவிட்டோம். ஆனால், டெல்லி என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமில்லை. இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று என்பது தான் உண்மை. புதிதாகப் பொறுப்பேற்ற திமுக அரசு, மத்திய அரசை ஒன்றிய அரசு என்று அழைக்கிறது. அமைச்சர்களும் திமுகவினரும் அவ்வாறே அழைக்கின்றனர்.

ஓர் அரசாங்கம் இயல்பாக சட்டப்படி ஒரு செயலைச் செய்கிறது. ஒன்றிய அரசுக்கு ஒரு கடிதம் எழுதுகிறது. அதில் ஒன்றியம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. தி.மு.க ஒன்றும் "இன்று முதல் நாங்கள் மத்திய அரசை ஒன்றிய அரசு என்றுதான் அழைப்போம்" எனத் தீர்மானம் ஏதும் நிறைவேற்றிவிடவில்லையே. பா.ஜ.க-வே யூனியன் மினிஸ்டர், யூனியன் கவர்மென்ட், யூனியன் கேபினெட் என்றுதானே டெல்லியில் சொல்லிவருகிறது. டெல்லி பா.ஜ.க, ஆங்கிலத்தில் சொல்வதை இங்கே தமிழில் நாம் சொன்னால் தவறு என்கிறது தமிழக பா.ஜ.க.

இப்படி அழைப்பதால் தமிழகத்தில் உள்ள பாஜக என்ன செய்வது என்று அறியாது மிகவும் குழம்பிய நிலையில் உள்ளது. இதை உடனடியாக தடுக்க வேண்டும், இல்லையெனில் இது மிகவும் தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று பாஜகவினர் கதறி வருகின்றனர். இந்த ஒரு சொல் ஜம்மு-காஷ்மீர் போல் பிரிவினைக்கும் வாய்ப்பாக அமைந்துவிடும், தமிழ் நாட்டை இந்தியாவில் இருந்து பிரிக்கும் முயற்சி இது என்றும் தமிழக பாஜகவினர் பேசி வருகின்றனர்.

இதுபோலவே இனி தமிழகம் அல்ல தமிழ்நாடு என்றே அழைப்போம் என்று சொன்னதற்கும், அடடா!. இந்த பெயரே தவறு, தமிழ் நாடு என்று பெயர் வைத்ததே தவறு என்று தொடர்ந்து ஒரு மாத காலம் புலம்பினார்கள், சங்க இலக்கியம் தொடங்கி இந்த நிலம் தமிழ்நாடு என்று அழைக்கப்படுவதை இவர்கள் அறிந்திருக்கவில்லை

ஒன்றியம் என்று சொன்னால் central எனப் பொருள்பட வேண்டும் என பா.ஜ.க-வினர் விரும்புகிறார்கள். ஆனால், யூனியன் என்றால் ஒன்றியம் என்றுதான் பொருள்கொள்ள வேண்டும். அதுதான் சரி. அதற்காகத்தான் தொடர்ந்து தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் ஒன்றியம் என்ற சொல்லை வலியுறுத்திவருகிறார். யூனியன் என்று சொன்னால் 'சங்கம்' எனவும், 'ஒன்றியம்' எனவும் பொருள் கொள்ளப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலேயே Union of India என ஆங்கிலத்திலும், 'ராஜ்ஜியங்களின் சங்கம்' என இந்தியிலும் எழுதியிருக்கிறார்கள்" என்பதை பலர் சுட்டிகாட்டியிருக்கிறார்கள்.

அலுவலகங்கள் வரை எல்லாம் வட இந்திய அலுவலகங்கள் போலவே காட்சியளிக்கிறது, எங்கும் தமிழ் அல்லது எந்த மாநில மொழியும் இல்லை. ஒரு தேசிய வங்கிக்கு சென்றால் கூட பூர்த்தி செய்யும் சலான்கள் அனைத்திலும் ஆங்கிலம் அல்லது இந்தி என்கிற இரண்டு மொழிகள் தான், தமிழ் எங்கும் இல்லை. இப்படி மொழியை திணிப்பது ஒரு நிலத்தில் உள்ள மக்களை அந்நியப்படுத்துவதற்கு சமம்.

'இந்திய ஒன்றிய புதுச்சேரி ஆட்சிப் பரப்பின் அமைச்சர் என்ற வகையில், என் கடமைகளை உண்மையாகவும், மனச்சான்றின்படியும் ஆற்றுவேன்' எனத் துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் முன்மொழிய, புதுச்சேரி என்.ஆர் காங்கிரஸ்-பா.ஜ.க அமைச்சர்களும் பதவியேற்றார்கள். இதை தமிழக பாஜகவினர் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை, அப்படித்தான் பதவிப் பிரமாணங்கள் நிகழ்கின்றன. அப்படித்தான் அரசியல் அமைப்பு சட்டம் சொல்கிறது என்பதை அறிந்த அவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளனர். பாண்டிச்சேரியில் அனைவரும் ஒன்றியம் , ஒன்றியம் என திரும்ப திரும்பி 'இந்திய ஒன்றிய புதுச்சேரி ஆட்சிப் பரப்பின் அமைச்சர் என்ற வகையில், என் உச்சரித்து பதவியேற்கும் காணொளி தமிழகத்தில் வைரலாகி உள்ளது.

# பா.ஜ.கவை கிலிகொள்ள வைத்த தமிழகத்தின் 'ஒரு சொல்' புரட்சி



**ஒன்றிய அரசை பா.ஜ.க விரும்ப வில்லை. ஒற்றை ஆட்சியை நோக்கிய அவர்கள் பயணத்தில் இது பெரிய தடையாக இருக்கும் என்பதால்தான் இவ்வளவு பதற்றப் படுகிறார்கள். அவர்களை பொறுத்த வரை மெல்ல மெல்ல மாநிலங் களின் உரிமைகளை எல்லாம் ஒவ்வொன்றாக நிர்மூலமாக்கி வருகிறார்கள், மாநிலங்களின் தனித்தன்மைகள் அனைத்தை யும் இல்லாமல் செய்யும் முயற் சியை கடந்த ஆறு வருடங்களா கவே செய்து வருகிறார்கள். இந்தி, சமஸ்கிருத மொழி திணிப்பு தொடங்கி மாநிலங்கள் மீது தங் களின் மேலாதிக்கத்தை செலுத்தி வருகிறார்கள்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருபடி மேலே சென்று ஒன்றியம் என்ற சொல் தவறான சொல் அல்ல. மாநிலங்கள் எல்லாம் சேர்ந்தது என்பதுதான் அதன் பொருள். ஒன்றியம் என்ற வார்த்தையைப் பார்த்து யாரும் மிரளத் தேவையில்லை. அந்த ஒரு வார்த்தையில் கூட்டாட்சித் தத்துவம் அடங்கியிருக்கிறது. அதற்காகத்தான் அதை நாங்கள் பயன்படுத்துகிறோம். பயன்படுத்துவோம். பயன்படுத்திக்கொண்டே இருப்போம்" என திருத்தமாகச் சொன்னார்.

ஒன்றிய அரசை பா.ஜ.க விரும்பவில்லை. ஒற்றை ஆட்சியை நோக்கிய அவர்கள் பயணத்தில் இது பெரிய தடையாக இருக்கும் என்பதால்தான் இவ்வளவு பதற்றப்படுகிறார்கள். அவர்களை பொறுத்தவரை மெல்ல மெல்ல மாநிலங்களின் உரிமைகளை எல்லாம் ஒவ்வொன்றாக நிர்மூலமாக்கி வருகிறார்கள், மாநிலங்களின் தனித்தன்மைகள் அனைத்தையும் இல்லாமல் செய்யும் முயற்சியை கடந்த ஆறு வருடங்களாகவே செய்து வருகிறார்கள். இந்தி, சமஸ்கிருத மொழி திணிப்பு தொடங்கி மாநிலங்கள் மீது தங்களின் மேலாதிக்கத்தை செலுத்தி வருகிறார்கள். ஒரு விமானத்தில் அந்த அந்த மாநில மொழிகளில் அபாய எச்சரிக்கை அழைப்புகள், நடைமுறைகள் கூட இல்லாத நிலைதான் உள்ளது. நீதிமன்றம் தொடங்கி மத்திய அரசு

தமிழகத்தின் அலுவல் ரீதியான அறிவிப்புகள், நிகழ்த்தப்படும் உரைகள் போன்றவற்றில் ஒன்றியம் என்ற வார்த்தையை பயன்படுத்த இடைக்கால தடை கோரிய வழக்கை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது. முதல்வர் மற்றும் அமைச்சர்கள் இவ்வாறுதான் பேச வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட இயலாது என்ற கருத்தையும் நீதிபதிகள் பதிவு செய்திருக்கிறார்கள். வழக்கையும் ரத்து செய்திருக்கிறார்கள். ஒன்றிய அரசின் புதிய பாராளுமன்றம், மாட மாளிகை தொடர்பான ஊநவெசயட ஏளைவய திட்டத்திற்கு எதிரான வழக்கு தொடுக்கப்பட்டபோது மனுதாரர் மீது அபராதம் விதித்தார்கள் என்பது இங்கே நியாபகத்திற்கு வருகிறது.

ஒற்றை நிர்வாகம் என்பது பா.ஜ.க கொள்கை. இந்தியாவின் ஜனநாயக அரசை அவர்கள் ஒரு சர்வாதிகார அரசாக மாற்ற துடித்துக் கொண்டிருக்கிறார்கள். சர்வாதிகாரத்தை மனதில் சுமந்து திரிபவர்களுக்கு ஒன்றியம் என்ற சொல் பயத்தை, பதற்றத்தை உருவாக்குகிறது என்பதை இதனை கூர்ந்து பார்க்கும் எவருக்கும் புரியும். இதன் மூலம் மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தை மீண்டும் ஒரு முறை தி.மு.க உரக்க உணர்த்தியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தமிழக பா.ஜ.க-வினர் தமிழ்நாட்டை தக்ஷின பிரதேசமாக பெயரிட துடித்தவர்கள், அதை அவர்களின் மாநிலச் செயலர்கள் வெளிப்டையாகவே மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இவர்கள் தமிழ்நாட்டில் நலன்கள் தொடங்கி தனித்துவம் வரை அனைத்தையும் ஒன்றிய சர்வாதிகார அரசின் காலடியில் வைக்க துடிப்பவர்கள் என்பதை தமிழர்கள் நன்கு அறிவார்கள். ■

# NAIDOC வார கொண்டாட்டம்

● கோகுலன், சிட்னி

ஆஸ்திரேலியப் பழங்குடிகள் மற்றும் டோரஸ் ஸ்டெரெயிட் தீவுகள் மக்களின் வரலாறு, கலாசாரம் மற்றும் சாதனைகளைக் கொண்டாடுவதற்காக, ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம், முதல் ஞாயிறு முதல் அடுத்த ஞாயிறு வரை, “NAIDOC வாரம்’ வாரம் நாடு தழுவிய அளவில் அனுசரிக்கப்படுகிறது.

ஒரு வாரம் முழுவதும் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில், பழங்குடிச் சமூகங்கள் மட்டுமல்லாமல், அனைத்து தரப்பு ஆஸ்திரேலியர்களும் கலந்து கொண்டு நடைபெறும் விழாவாக யேஜனுழுஊ வாரம் அமைந்திருப்பது தனிச்சிறப்பு.




### NAIDOC வரலாறு

*1938* முதல் *1955* வரை, ஜூலை முதல் ஞாயிற்றுக்கிழமை, தேசிய பழங்குடிகள் தினமாகவும், தேசிய துக்க நாளாகவும் (Day of Mourning) அனுசரிக்கப்பட்டு வந்தது.

*1991*-ற்குப்பிறகு, ஆஸ்திரேலியப்பழங்குடியினருடன் இணைந்து, டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களின் தனித்துவமான கலாச்சாரத்தை அங்கீகரிக்கும் வகையில், NAIDOC (National Aborigines and Islanders Day Observance Committee) அதாவது, தேசியப் பழங்குடியினர் மற்றும் தீவுவாசிகள் தினக் கண்காணிப்புக் குழு எனப் பெயர் பெற்றது.

இவர்களின் வரலாற்று மற்றும் கலாச்சாரத்தைப் பொதுமக்களுக்குப் புரிய வைக்கவும், அங்கீகாரத்தை ஏற்படுத்தும் வகையில், ஒரு நாள் மட்டுமல்லாமல், ஒரு வாரக் கொண்டாட்டமாக உருவெடுத்தது.

இந்த ஆண்டிற்கான கருப்பொருளாக (Theme) ‘நாட்டைக் குணமாக்கு’ ( HEAL COUNTRY) என்கிற வாக்கியம் விழாக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிலங்கள், நீர்நிலைகள், பூர்வீக இடங்கள் மற்றும் கலாச்சாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதே இந்தக் கொண்டாட்டத்தின் நோக்கம் ஆகும்.

### நாம் ஏன் NAIDOC வாரம் கொண்டாட வேண்டும்?

புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு நாட்டைச் சார்ந்த அல்லது கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள், தற்பொழுது குடியிருக்கும் ஆஸ்திரேலியாவில் 50,000 ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்கும் பழங்குடியினர் மற்றும் தீவுவாசிகள் மற்றும் அவரது தனித்துவக் கலாச்சாரங்கள் பற்றிய புரிதல் முழுவதுமாக இல்லை. மேலும், மேற்கத்தியர் வருகையாலும், காலணித்துவ அடக்கு முறையாலும் 250 ஆண்டுகளுக்கு மேல் அடக்குமுறைக்கு உட்பட்ட ஆஸ்திரேலியப் பூர்வக்குடிகளின் வரலாறும், சாதனைகளும் ஒரு சிலருக்கே தெரிந்திருக்கிறது. ‘ஆஸ்திரேலிய நாள்’ (Australia Day) கொண்டாட்டங்களில் பங்கேற்பது போல், பழங்குடியின மக்களின் நிகழ்வுகளை அங்கீகரிப்பதும் இல்லை.

ஆதலால், NAIDOC வாரமானது, ஆஸ்திரேலியப் பூர்வக்குடிகளின் கலாச்சார மற்றும் நிலம் சார்ந்த அறிவுகளைப் புரிந்து கொள்ளவும், அடக்குமுறையில் இருந்து மீண்டு வந்திருக்கும் அவர்களை சமமான முறையில் நடத்தவும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறைகளுக்கு நீதி பெற்றுத் தரவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும், மாநில மற்றும் தேசிய அளவில் மிகப் பெரும் கொண்டாட்டமாக, NAIDOC வாரம் மாறி வருவது மகிழ்ச்சிக்குரியது.

நாமும், நமது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன், ஆஸ்திரேலிய பழங்குடியினர் பற்றியும், அவர்களின் இதுதகைய கொண்டாட்டங்கள் பற்றியும் உரையாடுவது, அல்லது, உங்கள் பகுதியில் நடைபெறும் NAIDOC வாரக் கொண்டாட்டத்தில் நேரடியாகவோ, காணொளி மூலமாகவோ பங்கு பெறுதல் அவசியம் ஆகும்.

ஆஸ்திரேலியப் பழங்குடிகள் மற்றும் டோரஸ் ஸ்டெரெயிட் தீவுகள் மக்களின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் சாதனைகளைக் கொண்டாடுவதற்காக, ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம், முதல் ஞாயிறு முதல் அடுத்த ஞாயிறு வரை, ‘NAIDOC வாரம்’ நாடு தழுவிய அளவில் அனுசரிக்கப்படுகிறது.

ஒரு வாரம் முழுவதும் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில், பழங்குடிச் சமூகங்கள் மட்டுமல்லாமல், அனைத்து தரப்பு ஆஸ்திரேலியர்களும் கலந்து கொண்டு நடைபெறும் விழாவாக NAIDOC வாரம் அமைந்திருப்பது தனிச்சிறப்பு.

*1938* முதல் *1955* வரை, ஜூலை முதல் ஞாயிற்றுக் கிழமை, தேசிய பழங்குடிகள் தினமாகவும், தேசிய துக்க நாளாகவும் (Day of Mourning) அனுசரிக்கப்பட்டு வந்தது.

*1991*-ற்குப் பிறகு, ஆஸ்திரேலியப் பழங்குடியினருடன் இணைந்து, டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களின் தனித்துவமான கலாச்சாரத்தை அங்கீகரிக்கும் வகையில், NAIDOC (National Aborigines and Islanders Day Observance Committee), அதாவது, தேசியப் பழங்குடியினர் மற்றும் தீவுவாசிகள் தினக் கண்காணிப்புக் குழு எனப் பெயர் பெற்றது.

இவர்களின் வரலாற்று மற்றும் கலாச்சாரத்தைப் பொதுமக்களுக்குப் புரிய வைக்கவும், அங்கீகாரத்தை ஏற்படுத்தும் வகையில், ஒரு நாள் மட்டுமல்லாமல், ஒரு வாரக் கொண்டாட்டமாக உருவெடுத்தது.

IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST
PARISH PATIENCE IMMIGRATION LAWYERS (FOUNDED 1888)
MIA Migration Institute of Australia
Our large legal team provides a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates


Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au


Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au


Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au


Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters
- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:
- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234
Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

# விடைபெற்றார் ‘விசாரணைப்புலி’!



**உயிர்த்தஞாயிறு தினத்தன்று தாக்குதல் இடம்பெற்று சில தினங்களுக்குள் சந்தேக நபர்களைக் கைது செய்தமைக்காக சர்வதேச பொலிசாரின் பாராட்டையும் இவர் பெற்றார். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து இவர் இடமாற்றம் செய்யப்படும்போது, இவரின் கண்காணிப்பின் கீழ் எட்டாயிரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூடு, வசீம தாஜுதீன் கொலை, பிணைமுறி கொடுக்கல் வாங்கல் முறைகேடு உள்ளிட்ட விசாரணைகளும் இவரின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.**

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கடந்த 30 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். இவர் இலங்கையில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இவற்றில் றோயல் பார்க் கொலை, அங்குலான கொலை, உடத்தலவின்ன கொலைச் சம்பவம், மொஹமட் சியாம் கொலை, இரண்டு கோடி ரூபா கொள்ளை, டவுண்ஹோல் குண்டு வெடிப்பு, தெல்கந்தவில் இடம்பெற்ற ஆறு பேர் கொலைச் சம்பவம், சரத் பொன்சேகா கொலை முயற்சி, பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரன் கொலை, தலமல்விலவில் 80 வயது மூதாட்டியை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்தமை, ரவிராஜ் கொலை, 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை, வெலிக்கட சிறைச்சாலை சம்பவம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல், சண்டே லீடர் லசந்த விக்கிரதுங்க கொலை, கீத்நொயார், உபாலி தென்னக்கோன் ஆகியோரின் கடத்தல் சம்பவங்கள் பற்றிய விசாரணைகளும் ஷானி அபேசேகரவின் கண்காணிப்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்தது.

உயிர்த்தஞாயிறு தினத்தன்று தாக்குதல் இடம் பெற்று சில தினங்களுக்குள் சந்தேக நபர்களைக் கைது செய்தமைக்காக சர்வதேச பொலிசாரின் பாராட்டையும் இவர் பெற்றார். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து இவர் இடமாற்றம் செய்யப்படும்போது, இவரின் கண்காணிப்பின் கீழ் எட்டாயிரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூடு, வசீம தாஜூதீன் கொலை, பிணைமுறி கொடுக்கல் வாங்கல் முறை கேடு உள்ளிட்ட விசாரணைகளும் இவரின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, நான்கு ஜனாதிபதிமார்களை கொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி சம்பந்தமாகவும் ஷானி அபேசேகர விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களைக் கைது செய்திருந்ததாக அறியக்கிடைக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது டவுண்ஹோலில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல், தற்பொதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றியபோது பித்தளைசந்தியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல், மைத்திரிபால சிறிசேன அமைச்சராக பதவி வகித்தபோது குண்டுத் தாக்கல் மேற்கொள்ள சூழ்ச்சி செய்தமை மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைக் கொலைசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி பற்றிய விசாரணைகளும் ஷானி அபேசேகரவின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இவரின் சேவையைப் பாராட்டி பொலிஸ் பரிசோதகர், பிரதம பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் அத்தியட்சகர் என பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பத்தாம் திகதி பொலிஸ் சேவையில் இவர் இணைந்துகொண்டார். அதே ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அதிரடிப்படையின் பயிற்சிக்குச் சென்று டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப் படையில் சேவையை ஆரம்பித்தார். 1991ஆம் ஆண்டு பொலிஸ் பரிசோதகராக பதவியுயர்வு பெற்றார். 1995ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையின் நாரஹென்பிற்றி பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றார். 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற எஸ்.எஸ்.பி. ஒருவரின் கொலை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி ஷானி அபேசேகர குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தற்காலிகமாக இணைக்கப்பட்டார்.

அந்தக் கொலை விசாரணைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் காரணமாக சிபார்சுகளின் பேரில் இவர் பிரதம பொலிஸ் பரிசோதகராக பதவியுயர்த்தப்பட்டார். 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்றார். 2013ஆம் ஆண்டு விசேட பதவியுயர்வாக பொலிஸ் அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்றார். அங்குலான கொலைச் சம்பவ விசாரணைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமைக்காக இந்தப் பதவியுயர்வு அவருக்குக் கிடைத்தது.

நல்லாட்சியின்போது முக்கியமான விசாரணைகளும் ஷானியின் கண்காணிப்பின்கீழ்தான் இடம்பெற்றன இதனால் ராஜபக்ச தரப்புக்கு இவர் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார்.

இந்நிலையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் கோட்டாவின் ஆட்சியின்கீழ் 2020 ஜூலை 31 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டிருந்தார். கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

குற்ற விசாரணையின்போது துப்பாக்கி தொடர்பான விசாரணைகளுக்கு பொய்யான தகவல்களைக் கொடுத்து சாட்சிகளை மறைத்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது. நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டார். சிறைச்சாலைக்குள் கொரோனா ஏற்பட்டுக்கூட அவருக்கு கருணைக்காட்டப்படவில்லை.

இந்நிலையில் 2016 ஜூன் 16 ஆம் திகதி ஷானி அபேசகரவுக்கு பிணை வழங்கப்பட்டது. அத்துடன், ஷானி அபேசேகரவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்பதற்கான சான்றுகள் காணப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. எனவே, ஷானி தடுத்து வைக்கப்பட்டதன் பின்புலம் என்னவென்பதை நாம் கூறிபுரிய வேண்டியதில்லை.



உளரீதியாக ஷானிக்கு வதைகொடுக்கப்பட்டுள்ளது. விரக்தியில் அவர் ஓய்வுபெற்றுள்ளார். முக்கிய சில சம்பவங்களும் மூடிமறைக்கப்பட்டுள்ளன. சில சம்பவங்கள் திசைதிருப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது. சி.ஐ.டியின் திறம்பட செயற்பட்டதாலும், பலகோணங்களில் பார்வையை செலுத்தக்கூடியவர் என்பதாலும் இவர் விசாரணைப் புலியாகவே பார்க்கப்பட்டார். எனினும், ரஞ்சன் ராமநாயக்கவுடன் உரையாடுவது தொடர்பான காணொலி வெளியானதே அவரின் பயணத்தில் கறும்புள்ளியாக அமைந்தது என்பதையும் கூறியாக வேண்டும்.


H.N. PAWN BROKER
எச்.என். அடகு கடை
● குறைந்த வட்டி வீதம்
● நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
● சேவைக்கட்டணம் இல்லை
● சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
தங்கப்பவுணுக்கு
அதிகூடிய
முற்பணம் வழங்கப்படும்
வட்டி
3%
Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478


நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின்
மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபவமுள்ள...
PERPETUA TRADE
Money Transfer Worldwide
We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE
SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
RESPONSIBLE CUSTOMER SERVICE
CONVINIENT WORLDWIDE LOCATIONS
EASY, QUICK INTERNET MONEY TRANSFER
COMMERCIAL BANK
BOC
PEOPLE'S BANK
SEYLAN BANK PLC
HNB
சம்பத் வங்கி SampathBank
NSB National Savings Bank
cash Xpress
Send Money to any
Bank In Sri Lanka
Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# மூடப்படுகிறது KNOX CITY MYER

ஆஸ்திரேலியாவின் பல மாநிலங்களில் தனது கிளையை வியாபித்துள்ள பிரபல வர்த்தக அங்காடியான myer, **44** ஆண்டுகளாக நாடத்தி வந்த கிளையொன்றை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளது. மெல்பேர்ன் நகரிலிருந்து **25** கிலோமீற்றர் தொலைலவில் உள்ள Westfield Knox இல் **1977** ஆம் ஆண்டு திறக்கப்பட்ட கிளை நிறுவனமே இம்மாதத்துடன் மூடப்படுகின்றது. நீண்ட காலமாக இயந்திவந்த நிறுவனம், மூடப்படுப்படுவதற்கு அப்பிராந்திய மக்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். குறித்த நிறுவனம் மூடப்படுவதால் நூற்றுக்கும் அதிகமானோர் வேலையிழப்பை சந்திப்பர் என தெரியவருகின்றது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில், வியாபார சேவைகளும் இணையத்தின் ஊடாகவே பெரும்பாலும் இடம்பெற்றுவருகின்றது. அலிபாபா , அமேசன் போன்ற நிறுவனங்கள் ஒன்லைன் விற்பனையில் வெற்றிநடைபோடுவது இதற்கு சிறந்த சான்றாகும். அதேவேளை அதேவேளை coles, kmart, target, woolworths போன்றனவும் ஒன்லைன் ஓடர்களை நேரடியாக வீட்டு வாசலுக்கே கொண்டு சேர்க்கின்றன.

கொரோனா அலையில் சிக்குண்ட வர்த்தக நிலையங்கள் பல, தங்களது பொருட்களை, ஒன்லைன் முறைமை ஊடாக மக்களை சென்றடைவதற்கான நடைமுறைகளை கடைப்பிடித்தன. இதில் பல நிறுவனங்கள் வெற்றியும் கண்டன. வர்த்தக நிறுவனங்கள் தங்களது இணையத்தளத்தை தாண்டி பொருட்களை விற்பனை செய்வதற்கு வழி செய்யும் வகையில் ebay மற்றும் facebook market palce ஆகியன கூட வழி சமைத்துக்கொடுத்திருக்கிறது.

Myer போன்ற மிகபெரும் வர்த்தக நிலையங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றவை. எனவே, இந்நிறுவனங்கள் ஒன்லைன் விற்பனையை செய்வது கடினமான செயலாக இருக்கப்போவதில்லை. கொரோனாவுக்கு முன்னரும் Myer போன்ற நிறுவனங்களில் ஒன்லைன் மூலம் பொருட்களை முன்பதிவு செய்ய முடியும். ஆனால் முற்று முழுதாக ஒன்லைன் ஓடர்கள் மூலம் இலாபம் ஈட்டிக்கொள்ள முடியும் என்பதற்கான பரீட்சார்த்த காலப்பகுதியாக கொரோனா காலத்தை பாவித்து வெற்றி கண்டதன் பிரதிபலனே **44** ஆண்டுகளாக நடத்தப்பட்ட வந்த Know city myer மூடப்படுவதற்கான காரணம். இவ்வாறான ஒன்லைன் விற்பனை மூலம் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தி வெற்றி பெற்றால் கொரோனா போன்ற எதிர்பார புயல்களுக்கிலிருந்த தப்பித்து நீடித்து நிலைக்க முடியும் என்பதே பல நிறுவனங்களின் உத்தியாக இருக்கின்றது.




அத்துடன் குறிப்பிட்ட Myer விற்பனை நிலையத்தை அண்டிய பிரதேசத்துக்கு அருகாமையில் Eastland, Fountain Gate, Chadstone and Frankston ஆகிய இடங்களில் தனது கிளைகள் மக்களுக்கான சேவையை வழங்க காத்திருக்கிறன என அந் நிறுவனத்தின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் கட்டடங்களின் செலவீனங்களை குறைப்பதன் ஊடாக மக்களுக்கு சலுகைகளை வழங்க முடியும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

**44** ஆண்டுகள் நடத்தப்பட்ட Myer நிறுவனத்தின் இடத்தில் அடுத்த வருடம் முதல் Woolworths நிறுவனம் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளதெனிலும் Knox city யின் ஆடையாளமாக திகழ்ந்த myer மூடப்படுவது அப்பிராந்திய மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



# ஆஸியில் அரங்கேறும் 'கொரோனா' அரசியல்

பொன்ராஜ் தங்கமணி

கொரோனா தொற்று நோயை - உலக சுகாதார நிறுவனம், 30 ஜனவரி 2020 அன்று பொது சுகாதார அவசர நிலையாக அறிவித்தது. அன்று முதல் கொரோனாவுக்கு மத்தியில் உலகம் சுழல ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் கொரோனா பலம்பொருந்திய நாடுகளை மட்டுமல்ல, பொதுமக்களைத் தாண்டி, அரசியலிலும் தாக்கம் செலுத்தியது - செலுத்திக்கொண்டிருக்கிறது.

சீனாவில் இருந்து கொவிட்தொற்று முதலில் பரவியதால், இது சீனாவின் சதி வேலை எனவும், இது ஓர் உயிரியல் போர் தாக்குதல் எனவும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் இருந்து பிரேசில் வரை சீனாவை வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டின. இன்று வரை இது எந்த விதத்திலும் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படாத செய்தியாக இருந்தாலும், சீனாவை பலர் இன்றும் உறுதியாக நம்பவில்லை என்பது தான் உண்மை நிலைமை.

அமெரிக்காவில் நடந்த அதிபர் தேர்தலிலும் கொரோனாவை டிரம்ப் கையாண்ட விதம் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகி, அவர் தோல்வியிலும் ஒரு முக்கிய பங்கு வகித்தது. இந்தியாவை பார்க்கையில் இந்திய ஒன்றிய அரசு ஆரம்பத்தில் தடாலடியாக பொது முடக்கத்தை அறிவித்து செயலில் இறங்கி, பின்னர் அறிவியலுக்கு அப்பாற்பட்ட சில கேலிக்கு உரிய விடயங்களை பொதுவெளியில் செய்து சிரிப்புக்கு உள்ளானது.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஆளும்கட்சியாகஇருக்கும்லிபெரல் கட்சி எடுக்கும் அதேவித நிலைப்பாட்டை, விக்டோரியா மாநிலத்தில் எதிர் கட்சியாக எடுப்பதில்லை. மேற்கு ஆஸ்திரேலியாவில் கோவிட் தொற்று வந்தவுடன் ஒட்டு மொத்த மாநிலத்தையும் முடக்கத்துக்கு கொண்டு வரும் அந்த ஊரின் லேபர் கட்சியின் அரசியலை நியூ சவுத் வேல்ஸில் எதிர்க் கட்சியாக இருக்கும் லேபர் கட்சி பின்பற்றுவதில்லை.

இருப்பினும் மருத்துவத் துறையின் பங்களிப்போடு தடுப்பூசி கண்டு பிடித்து சற்று தலை நிமிர்ந்தது. ஆனால் அதன் பின்னர் வந்த இரண்டாம் அலையில் ஏற்பட்ட மரண எண்ணிக்கை உலக மக்கள் பலரின் கருணையை இந்தியா நோக்கி திரும்ப வைத்தது. இதை சார்ந்த அரசியலும் அங்கு பெரும் விவாதப் பொருளாக இன்றும் தொடர்கிறது.

இந்த நிலையில், உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெரும் அளவில் கொரோனாவால் பாதிக்கப்படாத ஆஸ்திரேலியாவில், கொரோனா சார்ந்த அரசியலுக்கோ சற்றும் பஞ்சம் இல்லை என்று தான் கூற வேண்டும். இரு பெரும் கட்சிகளான லேபர் மற்றும் லிபெரல் கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் எடுக்கும் நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது ஒரு சாதாரண மனிதனுக்கு எளிதில் எதுவும் புலப்படவில்லை என்பது தான் யதார்த்தமான உண்மை.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருக்கும் லிபெரல் கட்சி எடுக்கும் அதேவித நிலைப்பாட்டை, விக்டோரியா மாநிலத்தில் எதிர் கட்சியாக எடுப்பதில்லை. மேற்கு ஆஸ்திரேலியாவில் கோவிட் தொற்று வந்தவுடன் ஒட்டு மொத்த மாநிலத்தையும் முடக்கத்துக்கு கொண்டு வரும் அந்த ஊரின் லேபர் கட்சியின் அரசியலை நியூ சவுத் வேல்ஸில் எதிர்க் கட்சியாக இருக்கும் லேபர் கட்சி பின்பற்றுவதில்லை.

கோவிட் தொற்று விக்டோரியா மாநிலத்தில் சற்றே அதிகரித்த வேளையில், கடுமையான சொல் ஆயுதங்களுடன் ஒட்டு மொத்த விக்டோரிய மக்களும் ஏதோ பெரும் தவறு செய்துவிட்டது போல உருவகித்து நிருபர்களை சந்திக்கும் லிபெரல் கட்சியின் பிரதமர் ஸ்காட்மொரிசன், அதே எண்ணிக்கையுடைய தொற்றாளர்களை லிபெரல் ஆளும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் சந்திக்கும் போது சற்றும் சலனம் இல்லாமல், மென்போக்குடன் நடந்து கொள்வதை ஆஸ்திரேலிய மக்கள் அவதானித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், கோவிட் தொற்றை எதிர்த்துப் போராட அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகளில் அரசியல் தெளிவாக வேரூன்றியுள்ளது.

பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமரசங்களைக் கண்டுபிடிக்கும் கலைதான் அரசியல் என்பார்கள். அந்த வகையில், இதுவரை ஆஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அனைத்து ஆளும் கட்சிகளும் ஓரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டது என்றே புரிந்து கொள்ள முடிகிறது. ஒப்பீட்டளவில் ஆஸ்திரேலியாவில் தொற்று குறைவாக இருக்க முக்கிய காரணம், ஆஸ்திரேலிய நாடு பூகோள ரீதியாக தனியே இருப்பதோடு மட்டும் இல்லாமல், ஒன்றரை வருடங்களாக இன்றும் தனது நாட்டின் எல்லைக் கதவுகளை ஏறக்குறைய இறுக்கமாக மூடி தான் வைத்து உள்ளது. இதன் பயன்கள் ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்கு பெரும் பக்க பலமாக உள்ளது.

ஒருவேளை ஆசிய,ஆபிரிக்க நாடுகள் போல அடர்த்தியான அதிக மக்கள் தொகையை ஆஸ்திரேலியா கொண்டு இருந்தால் அல்லது ஐரோப்பிய நாடுகள் போல எல்லைகளை ஓரளவிற்கு திறந்து விட்டு இருந்தால் தொற்றை சமாளிப்பதில் ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளின் உண்மையான திறமையை அறிய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கும்.

தற்பொழுது மீண்டும் வந்துள்ள முடக்கத்தால், நாடு முழுதும் வர்த்தக நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சனைகள், அரசுகளுக்கு மீண்டும் ஒரு நெருக்குதலை கொடுத்துள்ளது. இப்பெரும் தொற்றை கட்டுப்படுத்த அரசு செயற்பாட்டு ரீதியில் முன்னேற்றம் கண்டிருக்கிறன்றதா என்ற கேள்வியை முன்வைத்தால் இல்லை என்றே சொல்ல முடியும். எனெனில் 6 வீதமான மக்களுக்கு மட்டுமே இரண்டு தடுப்பூசி செலுத்தி இருக்கின்றனர். இது அரசின் தோல்வியைக் காட்டுகிறது என்று எதிர் கட்சிகள் மட்டும் இன்றி வர்த்தக நிறுவனகளில் ஈடுபட்டு, நட்டத்தை சந்திக்கும் பலரும் குற்றம் சுமத்த ஆரம்பித்து விட்டார்கள்.

இது ஒரு புறம் இருக்க, தகவல் அறியும் சட்டம் மூலம் உள்துறை அமைச்சகத்திடம், ஆஸ்திரேலியாவை விட்டு எந்த நாட்டவர், எவ்வளவு பேர் வெளியே சென்றுள்ளார்கள் என்கிற தகவலை எஸ்பிஎஸ் செய்தி நிறுவனம் பெற்று வெளியிட்டது.

ஆகஸ்ட் 1, 2020 முதல் ஏப்ரல் 25, 2021 வரையிலான காலத்தில், ஆஸ்திரேலியாவை விட்டு இந்தியாவிற்கு போக வேண்டும் என 25,443 கோரிக்கைகளும், சீனாவிற்கு போக வேண்டும் என 21,547 கோரிக்கையும், இங்கிலாந்துக்கு போக வேண்டும் 15,703 கோரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

இதில் இங்கிலாந்து செல்வதற்கு 68 வீதமானவர்களுக்கு, சீனா செல்வதற்கு 59 வீதமானவர்களுக்கும், இந்திய செல்வதற்கு 46 வீதமானவர்களுக்கு ஒப்புதல் கொடுத்து உள்ளது ஆஸ்திரேலியா. கொரோனாவின் கடுமையான இரண்டாவது அலை இங்கிலாந்தை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த நேரத்திலும், அதேநேரம் இந்தியாவில் இரண்டாவது அலையின் தாக்கம் தொடங்கிய காலப்பகுதியிலேயே ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற ஒப்புதல் வழங்கப் பட்டிருக்கின்றன.

அதேபோல, ஆஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கான பயண விலக்குகளுக்கான ஒப்புதல் விகிதங்களில், இங்கிலாந்திலிருந்து வருபவர்களுக்கு 23.48 சதவீதமும், தென்னாப்பிரிக்காவிலிருந்து 30.73 சதவீதமும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இந்தியாவில் இருந்து வருபவர்களுக்கு 7.17 சதவீத கோரிக்கைகள் மட்டுமே ஒப்புதல் அளிக்கப் பட்டிருந்தன.

இந்த எண்ணிக்கைகள் ஆஸ்திரேலியாவின் இன ரீதியான ஒரு பாகுபாட்டை உணர்த்துவதாகவே அமைகிறது. தங்கள் பெற்றோரையும், உற்றாரையும் இழந்து அவர்களுக்கு இறுதிக் கடமை கூட செய்ய முடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அவர்களின் துயரங்களும் எளிதில் விவரிக்க முடியாதவை.

வாழ்க்கை முழுமைக்கும் ஒருவித குற்ற மனப்பான்மையை அவர்கள் சுமந்து வாழவேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளார்கள். இதைப் புரிந்து கொள்வதற்கு அதில் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் உறுப்பினர் ஆகத்தான் ஒருவர் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இந்த உண்மையை நாம் அறிய மறுக்கும் போது, குடியேறிய சமூகங்கள் ஒரு உழைக்கும் வர்க்கமாக மட்டும் இங்கே மாறிவிடும் அவலம் நிகழ அதிக வாய்ப்பு உள்ளது.

ஆஸ்திரேலியாவில் குடியேறிய சமூகங்கள் அதிக அளவில் அரசியலில் ஈடுபட்டு ஆட்சி அதிகாரம் நோக்கி நகரும் போது இது போன்ற பாரபட்சங்கள் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.



உலக நாடுகளுடன் ஒப்பிடு கையில் பெரும் அளவில் கொரோனாவால் பாதிக்கப்படாத ஆஸ்திரேலியாவில், கொரோனா சார்ந்த அரசியலுக்கோ சற்றும் பஞ்சம் இல்லை என்றுதான் கூற வேண்டும். இரு பெரும் கட்சிகளான லேபர் மற்றும் லிபெரல் கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் எடுக்கும் நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது ஒரு சாதாரண மனிதனுக்கு எளிதில் எதுவும் புலப்படவில்லை என்பது தான் யதார்த்தமான உண்மை.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


RAVANAS
RAVANAS BLINDS, CURTAIN SHUTTERS DOORS & WINDOWS
Free Measure & Quotes • Delivery & Install • Servicing All Suburbs
Our Services:
Blind Curtains | Plantation Shutter | Roller Shutters | Security Doors | Fly Screens | Outdoor Blinds
Aluminium Doors & Windows | Alfresco Glass Cover | Shower Screens | Mirrors | Wardrobe Doors
Contact: Raja (Roger) 0411 734 484 | 1300 572 540
Ravanas Group Pty Ltd 31/283 Rex Road, Campbellfield VIC 3061
Email : roger@ravanas.com.au
Web: www.ravanas.com.au

# ‘2024’ பஸில் ஒப்பரேஷன்!



ராஜாதி ராஜன், ராஜபக்ச குடும்பத்தின் மன்னன், பொருளாதாரத்தை மீட்கவந்த நவயுக கண்ணன், எங்கள் அண்ணன் பஸில் ராஜபக்ச வருகிறார், வருகிறார்” - என்ற பாணியிலான கோஷமே இலங்கை அரசியல் களத்தில் அண்மைக்காலமாக ஓங்கி ஒலித்தது - ஒலித்துக்கொண்டும் இருக்கின்றது.

பஸிலின் வருகைக்காக அவரின் சகாக்கள், தமிழகத்தில் அரங்கேறுவதுபோல அத்தனை அரசியல் கூத்துகளையும் தரமாகவும், சிறப்பாகவும் அரங்கேற்றினர். தரையில் அமர்ந்து மண்சோறு சாப்பிடுதல், மொட்டையடித்து அலகு குத்துதல், தீக்குளி இறங்குதல் போன்ற ஒரு சில சம்பவங்கள் மட்டுமே அரங்கேறவில்லை.

அதேபோல பஸிலின் ‘ரீ என்ட்ரி’ ஆளுங் கட்சிக்குள்ளேயே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. முக்கிய சில அமைச்சர்களே கதிகலங்கி நிற்கின்றனர். மறுபுறத்தில் கட்சி தாவல்கள் இடம்பெற்றுவிடுமோ என்ற அச்சத்தில் பிரதான எதிர்க்கட்சி உள்ளது.

சரிந்துள்ள பொருளாதாரத்தை மீட்கவே பஸில் வந்துள்ளார் என அவரின் சகாக்கள் சரவெடி அறிவிப்புகளை விடுத்தாலும், இதன் பின்னணியில் மேலும் சில அரசியல் நகர்வுகள் உள்ளன என்பதே உண்மை. அந்த விடயம் தொடர்பிலும், பஸிலின் வருகைக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பிலும் கவனத்தை செலுத்துவோம்.

## பஸிலுக்காக வந்த ‘20’

இரட்டைக் குடியுரிமை உடையோர் நாடாளுமன்றம் வருவதற்கு நல்லாட்சியின்போது கதவடைப்பு செய்யப்பட்டது. இதனால் அமெரிக்க குடியுரிமையை கொண்டுள்ள பஸில் ராஜபக்சவுக்கு 2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்த தடையை உடைக்கும் வகையிலான ஏற்பாடுகள் 20 ஆவது திருத்தச்சட்டத்தில் முன்வைக்கப்பட்டது . மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் சட்டம் வெற்றிகரமாகவும் நிறைவேறியது.

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கான ஏற்பாடு 20 இல் இடம்பெற்றிருந்ததால் அதற்கு விமல்வீரவன்ச, உதய கம்மன்பில உட்பட சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். ராஜபக்சக்கள் பின்வாங்கவில்லை. எனினும், எதிர்ப்பலைகளை சமாளிப்பதற்காக பஸில் நாடாளுமன்ற வருகை பிற்போடப்பட்டது. இல்லையேல் 20 நிறைவேறிய கையோடு பஸில் சபைக்கு வந்திருப்பார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. எனவே தனது சகாக்கள் ஊடாக மீண்டும் வியூகம் வகுத்தார் பஸில். கையொப்பம் திரட்டுதல், ஊடக சந்திப்புகள் என அத்தனை அரசியல் கூத்துகளும் இடம்பெற்றன. இறுதியில்தான் எரிபொருள் விலை உயர்வு விவகாரத்தை வைத்து உச்சகட்ட பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கிடையில் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்கு , மொட்டு கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் சிலர் தயாராகவே உள்ளனர் என தகவல்கள் வெளியாகியிருந்தாலும் பின்வாங்கல்களும் இடம்பெற்றன.

பஸிலுக்காக ஜயந்த கெட்டகொட பதவி துறப்பார் என்றே ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் எம்.பியான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க, பதவி துறப்பார் எனவும், அவருக்கு ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவி வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டிருந்தது என தகவல் வெளியானது.

நல்லாட்சி காலத்தில் ராஜபக்ச தரப்பினருக்கு எதிராக நீதிமன்ற வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணியான இவர் இலவசமாக முன்னிலையாகி வாதாடினார். இதற்கு நன்றிக்கடனாகவே ஜயந்த வீரசிங்கவுக்கு தேசியப்பட்டியல் ஊடாக சட்டவாக்க சபைக்குவர அனுமதி வழங்கப்பட்டது .

எனினும், பதவி துறப்பதற்கு ஜயந்த வீரசிங்க மறுப்பு தெரிவித்துள்ளார். இதனையடுத்து பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவை பதவி துறக்க வைத்து, அவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதற்கான நகர்வும் முன்னெடுக்கப்பட்டது. இத்திட்டத்துக்கு நிதி அமைச்சின் செயலாளர் பிபீ ஜயசுந்தர கடும் எதிர்ப்பை வெளியிட அந்த யோசனையும் கைவிடப்பட்டது என அறியமுடிகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் பளீல் மர்ஜானை பதவி விலகுமாறு பிரதமர் அலுவலக அதிகாரிகள் சிலர் வலியுறுத்தியுள்ளனர். பிரதமரின் செயலாளர் காமினி செனரத், மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் மர்ஜான் எம்பி உடன் இது குறித்து பேசியுள்ளனர்.

பஸிலுக்காக இந்த தியாகத்தை செய்யுமாறு தயவாக கேட்டுள்ளனர். அத்துடன் பேரமும் பேசப்பட்டுள்ளது. இதற்கு எந்த பதிலையும் தெரிவிக்காத மர்ஜான் எம்.பி., பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்திக்க வேண்டும் என கூறியுள்ளார்.

அதன்பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்தபோது, எக்காரணம் கொண்டும் பதவிவிலக தேவையில்லை என மர்ஜான் எம்பிக்கு பிரதமர் தெரிவித்தார் என அலரிமாளிகை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

“நீங்கள் பதவி விலக வேண்டியதில்லை. எந்த நேரத்திலும் பதவி விலகுவதற்காக தனி நாடாளுமன்ற உறுப்பினர்களை பஸில் ராஜபக்ச நியமித்துள்ளார். உங்களை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தது நான். அத்துடன் உங்களை பதவி விலகினால், மீதமுள்ள கொஞ்சம் முஸ்லிம் மக்களும் எம்மோடு கோபித்துக் கொள்வார்கள்.” என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச மர்ஜான் எம்.பி க்கு தெரிவித்துள்ளார்.

கோடீஸ்வர வர்த்தகரான மர்ஜான் எம்.பி., மஹிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவராக கருதப்படுகின்றார்.

அத்துடன், கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்சவுக்கு மிகப்பெரிய உதவிகளையும், பண உதவிகளையும் செய்துள்ளதால், அவருக்கு இந்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது என்ற கதையும் உள்ளது. இவ்வாறு நீண்ட இழுபறிக்கு மத்தியிலேயே தேசியப்பட்டியல் விவகாரம் தொடர்பில் இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளது.

## கிலிகொள்ளும் அமைச்சர்கள் சமாளிப்பு வியூகமும்

அதேவேளை, நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பதவியை ஏற்கும் பஸில் ராஜபக்சவின்கீழ் துறைமுக நகரம், முதலீட்டுச்சபை உட்பட முக்கிய நிறுவனங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

இதன்மூலம் அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பஸில் கையடிப்பாரெனவும், இதனால் சுயாதீனமாக இயங்கமுடியாத நிலை எற்படும் எனவும் முக்கியமான சில அமைச்சர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

மஹிந்த ஆட்சியில் பஸில் பொருளாதார விவகார அமைச்சு பதவியை வகித்தார். அப்போது அவரே அமைச்சரவையில் பலம்பொருந்தியவராக இருந்தார். அனைத்து அமைச்சுகள் விடயத்திலும் தலையிட்டார்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் இது தொடர்பில் எடுத்துரைத்து , சுயாதீனமாக இயங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வதே அமைச்சர்களின் திட்டமாகும்.

இதற்கிடையில் பஸிலின் வருகைக்கு போர்க்கொடி தூக்கிய அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரை பஸில் தனித்தனியே சந்தித்து சமரசம் பேசியுள்ளார். அவர்களும் சரணடைந்துள்ளனர்.

## 2024 ஜனாதிபதி தேர்தல்

2024 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே பஸில் மீண்டும் நாடாளுமன்ற அரசியலில் இறங்கியுள்ளார். பஸில் வெளிப்படையாக இனவாதம் கக்காத அரசியல்வாதியென்பதாலும், சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் ஆதரவு அவருக்கு இருப்பதாலும் சில தேசியவாத பிக்குகளுக்கு பஸிலை பிடிப்பதில்லை. அதனால் அவருக்கு எதிராக கடும் விமர்சனங்களை அன்று முதல் இன்று வரை முன்வைத்துவருகின்றனர். எனவே, அவ்வாறான தேரர்களை சமாளிப்பதற்காக நடவடிக்கையிலும் பஸில் இறங்கியுள்ளார்.

2024 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வுபெறக்கூடும் எனவும், பிரதமர் பதவி பஸிலிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2030 ஜனாதிபதி தேர்தலில் நாமலுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதமும் பெறப்பட்டுள்ளது. அந்த உத்தரவாதத்தை வழங்கியதாலேயே பஸிலுக்கு 2024 இல் போட்டியிட பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

அதேபோல எதிர்க்கட்சிகளை உடைத்து, எம்.பிக்களை விலைக்கு வாங்குவது பஸிலுக்கு கைவந்தகலை. பலமானதொரு கூட்டணியை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சக்திக்கு பஸிலின் நகர்வுகள் நிச்சயம் தலையிடியை ஏற்படுத்தக்கூடும். பொருளாதாரத்தை மீட்பார் என்ற நம்பிக்கையில் பஸில் களமிறக்கபபட்டாலும், ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதே அவரின் வருகையின் பிரதான நோக்கமாக பார்க்கப்படுகின்றது. ■

ஊழிக்காலம்-2
24



# புயலுக்குப்பின்...



முப்பது வயதைத்தொட்டுக் கொண்டிருக்கு லதா. வயிற்றில் பாரிய காயமடைந்ததால், கருப்பை இல்லாதவளாகி விட்டாள். திருமணம் செய்ய வேண்டுமென்ற பெரிய அவா அவளுக்கிருந்தது. இவளைப்போலவே சண்டையில் காயமடைந்து கருவளமிழந்த சிலபெண்கள் திருமண-மாகி பிள்ளைகளை தத்தெடுத்து வளர்த்தார்கள். இதையே உதாரண-மாகக் பேசி தன்னையும் யாராவது திருமணம் செய்ய முன்வர வேண்டும் என்று சொல்வாள்.

திருமணம் குடும்பம் என்ற பேச்சு வரக்காரணமாய் அமைந்த சம்பவம். அங்கே கர்ப்பவதிகளாக வந்த பெண்களில் இருவர் வைத்தியசாலையில் குழந்தைகளைப் பெற்றாலும், இந்தக் கூட்டத்துக்குள்தான் தாயும் அவர்களின் பச்சைச்சிசுக்களும் இருந்தனர். சிறுசிறு பிரச்சனைகள் வரும்போது அவளிடம் ஆலோசனை கேட்டார்கள்.

நாங்கள் கிராமத்து வீடுகளில்கூட பிள்ளைப்பேறானதும் தாயுடன் குழந்தையையும் தனியான அறையுள் பிரித்து வைப்போம். வெளியே சென்று வருபவர்கள் சுத்தமாகத்தான் அந்த அறைக்குள் போகலாம் ஆனால் இங்கோ இந்தக் கிழங்கு அடுக்கியது போலுள்ள கூட்டத்துள்தான் அவர்களும் படுத்துறங்கினர். லதா அவளுடைய படுக்கையை எடுத்து வெளியே போட்டு இடம் ஒதுக்கிக் கொடுத்தாள்.

“ஆ...அ... கிழவிமாதிரி எல்லாம் அறிஞ்சு வைச்சிருக்கிறாய் கெட்டிக் காரிதான்.” என்ற தோழியிடம்,

“ எல்லாம் தியறிதான். பிரக்டீக்கல் இல்லை.” என்றாள். இவள் எல்லாத் துன்பங்களையும் விழுங்கிவிட்டுத் தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கும் மாஜிக் கடற்புலிப் பெண்களின் கட்டளைத் தளபதியாக இருந்தவள். பின்னர் விலகிச் சென்றவளாயினும் ஓமந்தை அறிவிப்பை ஏற்று இங்கே வந்திருக்கிறாள்.

புரட்டாசி மாதம் கௌரிகாப்பு விர-தம் ஆரம்பமாகு முன் பெண்களில் பலர் தாம் வருடந்தோறும் அந்த நோன்பை அனுசரிப்பதாகவும் இவ்வருடமும் விரதமிருக்கப் போவதாகவும் கூறினர். இருபத்தொரு நாட்கள். பார்வதி தமது பிரிவு சார்ஜன் அலியா மேடத்திடம் அனுமதி பெற்றாள்.(யானை போன்ற உருவமுள்ளவளாதலால் அவளுக்கு அலியாமேடம் என்ற பெயரை பெண்கள் சூட்டினர்.)

கிராம சேவையாளரின் உதவியுடன்,பொருட்களை தமது பணத்திலேயே வாங்கி, கும்பம் வைத்து முறைப்படி விரதமிருந்து காப்பும் கட்டினார்கள். இதில் நிர்வாகம் எந்த உதவியும் செய்யவில்லை. இடையில் பெருமழை கொட்டோ கொட்டேன்று கொட்டியது.

அந்த முற்றத்தில் இப்போது ஆறு புதிய தரப்பால் கொட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஓயெல் பரீட்சைக்கு படிக்கும் பெண்கள் அவர்களது படிப்புக்கு இடையூறில்லாமல் இருக்கவே அவை அமைத்துக் கொடுக்கப்பட்டன. கும்பம் வைத்த இடத்துக்கு கிராமசேவையாளர் ஒரு தரப்பாலைக் கொடுத்தார்.

பார்வதி தானே இரண்டு தடிகளைத் தேடி அந்த தரப்பாலைக் கொண்டு ஒருமணிநேரத்துள் ஒரு கொட்டகையை அமைத்தாள் இப்போது பார்வதிக்கு அது தனிக் கொட்டில் என்பதுடன் வழங்கலில் சமையலுக்கு வரும் பாதுகாக்க வேண்டிய பொருட்களை வைப்புச்செய்யவும், வழிபாட்டுக்கும் அந்தக் கொட்டில் பயன்பட்டது.

ஓயெல் படிப்போருக்கான தற்காலிக கல்விக்கூடம் “ஏ” புளொக்கின் வேலி-யோரமாக அமைக்கப்பட்டது. காலையில் இந்த புளொக்கிலிருந்து இராணுவப்பெண்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்வார்கள். மாலையில் கொண்டுவந்து சேர்ப்பர். ஆசிரியர்கள் வெளியிலிருந்தே அன்றாடம் வந்துபோனார்கள். இவர்கள் பரீட்சை எழுதக்கூட வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை “ஏ” புளொக் மாடியை இதற்காக ஒதுக்கிக் கொடுத்தனர். எழுபது பெண்களும் ஏ புளொக்கின சந்தடிகளுக்கு மத்தியில் பரீட்சை எழுதி முடித்தனர்.

இந்த பரீட்சை முடிகின்ற வேளை ஒவ்வொரு புளொக்கிற்கும் ஒவ்வொரு தொலைக்காட்சிப் பெட்டி வந்தது.

மாதக் கடைசியில் கச்சேரி உணவு வழங்கும் பணியைக் கைவிட்டது. அரசாங்கமும் பொறுப்பேற்கவில்லை. திடீரென இரவு உணவு வரவில்லை. பார்வதி உணவுக்காக வந்த பொருட்களில் விரதகாலத்தில் காலை உணவை அதிகமானோர் தவிர்த்ததால் அவற்றை சேகரித்து வைத்திருந்தாள். எனவே நீரைக் கொதிக்க வைத்து நூடுல்சைப் போட்டார்கள் பிள்ளைகள் சாப்பிட்டார்கள். ஏனைய புளொக்குகளில் உணவில்லை. கப்டன் கிராமசேவையாளருக்கு போனில் அழைப்பு விட்டு நிலைமையை புரிய வைத்தாள். அந்த நல்ல மனிதர் அந்த இரவில் சில வர்த்தகர்களைத் தொடர்பு கொண்டு நூடுல்ஸ் மூடைகளைப் பெற்று அவற்றை தன் உந்துருளியிலேயே கட்டிக் கொண்டு வந்தார்.

மறுநாட்காலை பயறு அவித்தார்கள். எல்லாப்புளொக்கிலும் ஏதோ இருந்தது. மத்தியானம் சோறாக்கினார்கள். கறிக்குரிய பொருட்கள் இல்லை. ஆனால் பீ புளொக்கில் ரின்மீனும் பருப்பும் சமைத்தார்கள் இதுவும் விரதகாலத்தில் சேமித்ததுதான். அருகிலேயே இருந்த சீ பு ளொக்கினரும் தமக்கு ஏதாவது தரும்படி கேட்டனர் பார்வதி அவர்களுக்கு தேவையான பருப்பை வேலிக்குள்ளாக அனுப்பினாள். அவர்களும் சமைத்துண்டனர்.

ஏ யும் டீ யும் அப்படியே இருந்தனர். மாலையில்தான் அவர்களுக்கான மரக்கறி வந்தது. எனினும் பீ யும் சீ யும் சமைத்து சாப்பிட்டார்கள் என்ற செய்தி வியப்புக்குரியதாகி விசாரணைக்குப் போனது.

“ஒன்றுமில்லை எம்மிடம் நூற்றிப் பன்னிரண்டு பேர் கௌரிக் காப்பு நோன்பிருந்தனர். அவர்கள் நான்கைந்து பேர்களாக கூடி சமைத்து ஒரு வேளை-யே உண்டனர். எனவே மீன்ரின் பருப்பு தேங்காய் மரக்கறிஎண்ணை என்பன சேமிப்பில் விழுந்தன.அதை இப்போது சமைத்தோம்.

மேலும் எமது பெண்கள் வணங்காமண் கப்பலில் வந்து கொடுத்த உணவுப் பொருட்களானநெத்தலிகடலைப்பருப்பு என்பவற்றை பொரித்து சாப்பிடவும், பலகாரம் சுடவும் கூட நாங்கள் எண்ணை கொடுக்கிறோம். அதிலிருந்தே சீ புளொக்கிற்கும் கொடுத்தோம் ஏ யும் டீ யும் கேட்கவில்லை” என்றாள் பார்வதி.

அவள் சிங்களத்தில் அவர்களுடன் பேசியது புரியாமலே,

“நல்லா ஆமிக்கு வால் பிடிக்கிறா” என்று அவள் காதுபட முணுமுணுத்தவர்களை அவள் பொருட்படுத்தவில்லை.

கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சபையைச் சேர்ந்தவர்கள் வந்து கிறிஸ்தவப்பிள்ளைகளுக்கு நிகழ்ச்சிகள் பழக்கினார்கள். நத்தார் கழிந்த மறுநாள் நல்ல இசைக் குழு வருவதாகப் பேசிக் கொண்டனர். வந்ததென்னவோ கரோல்பாடகர்கள்தான். எல்லோருக்கும் கேக் பிஸ்கட் பழம் பானம் எல்லாம் வழங்கினார்கள்.

பின்னர் பாடினார்கள் ஆடினார்கள். நேரம் செல்லச் செல்ல நின்றவர்களும் ஆட்டத்தில் கலந்து கொண்டுபெருத்த கூச்சலுடன் நடனமாடினர். ஆமிப்பெண்களும் இந்தப் பெண்களுடன் களத்திலிறங்கி கூத்தடித்தனா். நள்ளிரவு கடந்தபின்பே உறங்கச் சென்றனர்.வாரம் ஒருமுறை அங்குள்ள பெரிய வெள்ளைச்சுவரில் சினிமாப்படம் போடுவார்கள் அப்போதும் இதுபோலதான் மூன்று புளொக்குகளிலிருந்தும் பிள்ளைகள் இங்கே வருவர் வந்து தம் மனதுக்கிசைந்தவர்களுடன் பேசிக் கழிப்பர். இன்றும் தம்மை மறந்து ஆனந்தமாகவே சென்றனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை புலேந்திரன் வருவான் என பார்வதி எதிர்பார்த்தாள். அவனுக்கும் அவனது பிள்ளைகளுக்குமென பின்னிவைத்திருந்த கம்பளித் தொப்பிகளையும் ஆயத்தமாக வைத்திருந்தாள் அவன் வந்து போய் ஒருமாதமாகிறது.

அவளைத்தேடி பார்வையாளர்கள் வந்திருப்பதாக செய்தி வரவே அவள் பனித் தொப்பிகளையும் எழுதி வைத்திருந்த கடிதங்களையும் எடுத்துக் கொண்டு செல்வதற்க வாசலுக்கு வந்தாள். எனினும் மற்றவர்கள் புறப்படத் தாமதமானதால், ஆமிப்பெண்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au




# SHIPPING SCHEDULE TO SRI LANKA

| Month | Final Cut Off date | Estimated Arrival Date |
|---|---|---|
| July | 2021-07-03 | 2021-08-10 |
| July | 2021-07-10 | 2021-08-17 |
| July | 2021-07-17 | 2021-08-24 |
| July | 2021-07-24 | 2021-08-31 |
| July | 2021-07-31 | 2021-09-07 |
| August | 2021-08-07 | 2021-09-14 |
| August | 2021-08-14 | 2021-09-21 |
| August | 2021-08-21 | 2021-09-28 |
| August | 2021-08-28 | 2021-10-05 |

Transco™ CARGO
We love to deliver

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU